JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 05 | ஜுலை 2023 | ஆண்டு சந்தா ₹ 100

தன் சுயபெலத்தை சாராமல். முற்றிலும் கர்த்தரையே

# சார்ந்திரு!





## உள்ளே...







இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

**இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.**




**30,000 வாலிபர்கள்**

**கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?**

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். Youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைன் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **மேலும் தொடர்புக்கு 9750955547**

*ஆசிரியர்:* **மோகன் சி. லாசரஸ்**

*இணை ஆசிரியர்:* **அவினாஷ்**

*ஆசிரியர் குழு:* **வயலா | ஜெயசீலன் | ரவி | வில்லியம் | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்**

*வடிவமைப்பு:* **டேவிட்சன்**

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்



## சார்ந்திரு!

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

நம்முடைய வாழ்க்கையில் சவால்களும், பிரச்சனைகளும் சூழுந்து, நம்மை பயமுறுத்தும் போதும், நம்முடைய மனம் யாரை சார்ந்திருக்கும்? யாரை நம்பி இருக்கும்? வேதத்திலே ஆசா என்னும் யூதாவின் ராஜா தான் ஆட்சி செய்த அமரிக்கையான பத்து ஆண்டுகளுக்கு பின்னால் ஒரு பெரிய யுத்தத்தை சந்திக்கிறார். தன்னைவிட 2 மடங்கு அதிகமான படைகளும், இரதங்களும் எதிர்த்து நின்ற போதும், ஆசா ஒரு அழகிய ஜெபத்தை ஏறெடுத்தார், பெலனுள்ளவனுக்காகிலும் பெலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது உமக்கு லேசான காரியம். ஆசா தன்னுடைய படைகளையும், தன் பலத்தையும் சார்ந்திருக்காமல், தேவனையும் அவருடைய வல்லமையையும் சார்ந்திருந்தார்.

ஆசா கர்த்தரை சார்ந்திருந்ததால், தேவன் அவருக்காக யுத்தம் செய்தார். Ethiopian Army முறிந்து ஓடிப் போனார்கள். மேலும் அநேக கொள்ளைப் பொருட்களை அள்ளிக் கொண்டு வந்தனர். கர்த்தரை சார்ந்திருந்திருந்தபடியால், தேவன் பாதுகாப்பைத் தந்தார், வெற்றி தந்தார், மேலும் கொள்ளைப் பொருட்களை தந்தார். அவரை சார்ந்திருந்தபடியினால் ஒரு குறைவில்லாமல் நடத்தினார்.

**இன்றைக்கும் அநேக வாலிபர்கள் தங்கள் படிப்பையும், பதவியையும், அனுபவங்களையும் சார்ந்திருந்து அவைகள் கைகொடுக்காத போது, சோர்ந்து போய், முடங்கி விடுகிறார்கள். எழும்ப முடியாமல் திகைத்து போகிறார்கள்.**
**இன்றைக்கு உன்னுடைய சார்ந்திருப்பு யார் மீது உள்ளது. கர்த்தரை சார்ந்திருக்கும் போது அவர் உன்னை எல்லா வீழ்ச்சிகளிலிருந்து உயர்த்தி, வெற்றியின் பாதையில் நித்தமும் நடத்துவார்.**

ஆசாவின் நாட்களில் தேவன் அவரை தேசத்தில் சுத்திகரிப்புக்கு பயன்படுத்தி, ஜனங்கள் தேவன் மீது விசுவாசம் வைக்க உதவினார். அதேபோல் உங்களை உயர்த்தி ஆசீர்வதிப்பார். ஆனால் எப்பொழுதும் தேவனை சார்ந்திருக்க வேண்டும்.

**ஆசாவின் நாட்களில் தேவன் அவரை தேசத்தின் சுத்திகரிப்புக்கு பயன்படுத்தி, ஜனங்களை தேவன் மீது விசுவாசம் வைக்க உதவினார். ஆனால் தன்னுடைய முடிவு நாட்களில் ஆசா தேவனை விட வைத்தியர்களையே சார்ந்திருந்தார்.**

எனக்கன்பான வாலிபர்களே! முடிவு வரை தேவனை சார்ந்திருந்தால் விடுதலை, பாதுகாப்பு மட்டுமல்லாமல் உயர்வையும் ஆசீர்வாதத்தையும் தருவார். அதற்கு மேல் பாதுகாப்பையும், பரிசு பொருட்களையும் தருவார். இறுதிவரை கர்த்தரை சார்ந்திருக்கும் போது பிரம்மிக்க வைக்கும் செயல்களை செய்வார்! செயல்படு! அவர் சித்தம்போல!!



கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**




பிறந்த 2வது நாளில் குழந்தை இறந்தது என்று சொல்லி புதைக்க கொண்டு சென்ற போது, கர்த்தர் ஜீவனைக் கொடுத்து, இன்றும் அநேகருக்கு உயிருள்ள சாட்சியாக பயன்படுத்தி வரும் இளம் வாலிபன் வாட்சன் விஜய் அவர்களின் சுவாரஸ்யமான அனுபவங்களை நாம் கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

சாட்சி தொகுப்பு: காலேப்

*காலேப்:* **Praise the Lord Brother!**

**விஜய்:** **Praise the Lord Anna.**

*காலேப்:* உங்களுடைய பிறப்பே ஒரு அற்புதமான பிறப்பு என்று கேள்விப்பட்டேன். அதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

**விஜய்:** ஆமாம், அண்ணா... நான் பிறந்த 2வது நாள் மிகவும் பெலவீனப்பட்டதால் என்னை இன்குபெட்டரில் வைத்திருந்தார்கள். ஆனால் மூச்சுத் திணறல் வந்து இறந்ததாக என் பெற்றோருக்கு மருத்துவர்கள் சொன்னார்கள். எங்கள் ஊருக்கு சுமார் 60 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டுமென்பதால், பக்கத்தில் ஏதாவது ஏரியில் தூக்கிப் போடலாம் என்று சுற்றி கட்டி கட்டைப் பையில் வைத்து எனது தாத்தா, பாட்டி எடுத்துக் கொண்டு போனார்கள்.




*காலேப்:* கேட்கவே கஷ்டமாக இருக்கிறது... உங்களைத் தூக்கி வீசினார்களா?

**விஜய்:** இல்லை அண்ணா, சொல்கிறேன்... ரொம்ப தூர பயணம் செல்ல வேண்டும் என்பதால் Tea குடித்து விட்டு போகலாம் என்று பையைக் கடையில் வைத்து விட்டு, Tea குடிக்க பாட்டி, தாத்தா உட்கார்ந்தார்கள். அப்போது அந்த பை லேசாக அசைய ஆரம்பித்தது. அந்த கடையில் இருந்தவர்கள் பையில் என்ன இருக்கிறது? பை அசைகிறதே என்று கேட்டதும், தாத்தாவும் பாட்டியும் பையைத் திறந்து பார்த்த போது, எனக்கு உயிர் வந்திருக்கிறது. உடனே அந்த கடையிலேயே முதலாவது எனக்கு Tea தான் வாங்கிக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள்.

*காலேப்:* செம... சரி, உங்களது குடும்பத்தைப் பற்றி சொல்லவே இல்லையே? குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்...

**விஜய்:** எனது அப்பா ஊர் பாண்டிச்சேரி. எனது அம்மா ஊர் திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் என்னும் ஊரில் ஒரு சிறுகிராமம். அந்த கிராமத்தில் தான் நான் பிறந்து வளர்ந்தேன். இப்பொழுதும் நான் பெரிய பாளையத்தில் தான் வசித்து வருகிறேன். நான் எனது பெற்றோருக்கு இரண்டாவது பையன். எனக்கு ஒரு அக்காவும், ஒரு தங்கையும் இருக்கிறார்கள். எனது அப்பா கிறிஸ்தவர், அம்மா இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். ஆனால் அப்பாவை விட அம்மா நன்றாக ஜெபிக்கிறவர்கள். வேதத்தை தினமும் படிப்பார்கள். சிறு வயதிலேயே எனக்கு வேதத்தைக் கற்றுக் கொடுப்பதோடு, வேதத்தில் உள்ள கதைகளையும் சொல்லிக் கொடுத்து வளர்த்தார்கள்.

*காலேப்:* அப்போ சிறுவயதிலேயே வேதத்தைப் படித்து தெரிந்து ஆண்டவரோடு நல்ல ஐக்கியத்தில் இருந்தீர்களா?

**விஜய்:** இல்லை அண்ணா... நான் ஒரு பெயர் கிறிஸ்தவனாகத் தான் இருந்தேன். எனக்கும் ஆண்டவருக்கும் எந்த ஐக்கியமும் கிடையாது. கர்த்தரோடு நேரம் செலவிட மாட்டேன், ஆனால் வேதத்தின் மீது அளவில்லாத ஆசை இருந்தது. வேதத்தை படிக்க வேண்டும், வேதத்தில் இருக்கும் காரியங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆலயத்தில் பாஸ்டர் கானாவூர் கல்யாணம், சகேயு, மோசே, ஆபிரகாம், தாவீது இவர்களைப் பற்றி வேதத்திலிருந்து சொல்வதைக் கேட்கும் போது, வேதத்தைப் படிக்க வேண்டுமென்ற ஆசை வந்தது.

*காலேப்:* சரி... வேதத்தைப் படிக்க ஆசை வந்தது... படிக்க ஆரம்பித்தீர்களா?

**விஜய்:** ஆம் அண்ணா... நான் 3வது படிக்கும் போதிலிருந்து வேதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். 5வது படிக்கும் போது, எனது அம்மா எனக்கென்று ஒரு பைபிள் வாங்கிக் கொடுத்தார்கள். அதிலிருந்து நான் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். வேதத்தைப் படித்தாலும் எனக்கும் ஆண்டவருக்கும் எந்த தொடர்பும் இல்லாத வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தேன்.

*காலேப்:* சரி... வேதத்தை படிக்கிறீங்க... அப்போ உங்க வாழ்க்கை எங்கேயோ போயிருக்கணுமே...

**விஜய்:** என்ன சொல்றது அண்ணே... ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று சொல்வார்கள். அதுபோல் தான் என் வாழ்க்கையும் இருந்தது. எல்லா வாலிபர்களைப் போல பாவ பழக்கங்கள் எனக்குள் இருந்தது. ஆலயத்திற்கு செல்வேன், ஆராதனை செய்வதற்கு கண்ணை மூட சொன்னதும், நான் பைபிளை எனது அம்மாவின் இடத்தில் அவர்களுக்கே தெரியாமல் வைத்து விட்டு கிரிக்கெட் விளையாட சென்று விடுவேன். இன்னும் பல பாவ காரியங்கள் எனக்குள் இருந்தது. இப்படி 9வது வகுப்பு வரை எனது வாழ்க்கை சென்றது.

*காலேப்:* சரி அப்போ எப்பொழுது தான் இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டீர்கள்?

**விஜய்:** நான் 10ம் வகுப்பு படிக்கும் போது, மாமாவுடைய மகள்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்த அனுபவமுள்ளவர்கள். அவர்களுக்கு தேவன் தீர்க்கதரிசன வரத்தைக் கொடுத்திருந்தார். டி.வியில் கிரிக்கெட் பார்ப்பதற்காக அவர்கள் வீட்டிற்கு சென்ற போது, அங்கு 10 அக்காமார்கள் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னையும் வலுக் கட்டாயமாக ஜெபத்தில் உட்கார வைத்தார்கள். அவர்கள் அந்நிய பாஷையில் பேசுவது, ஆவியில் நிரம்பி ஜெபிக்கிறதை பார்த்தேன். அப்போது எனக்கு எதுவும் புரியவில்லை. ஒரு அக்கா என் தலையில் கை வைத்து ஜெபித்த போது, ''கர்த்தர் உன்னை ஊழியக்காரனாக மாற்றுகிறார், நீ தேவனுக்கு வேண்டுமென்று கர்த்தர் சொல்கிறார்'' என்று தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். நான் அரைமணி நேரம் கூட ஆலயத்தில் இருக்க மாட்டேன், என்னைப் போய் ஊழியக்காரனாக மாற்றுகிறாரா? நமக்கு இது சரிபட்டு வராது என்று அங்கிருந்து வெளியே வந்து விட்டேன். நான் அந்த இடத்தை விட்டு வெளியே வந்தாலும், அவர்கள் சொன்ன அந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் எனக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தன. அதன்பிறகு அடிக்கடி அந்த வார்த்தைகள் என்னோடு பேசுவது போல் இருக்கும். இருந்தாலும் நான் அந்த வார்த்தைகளை நிராகரித்துக் கொண்டே இருந்தேன். நான் 12ம் வகுப்பை முடித்து விட்டேன்.



*காலேப்:* சரி... அதன்பிறகு உங்கள் வாழ்க்கை மாறியதா? நீங்கள் தொடர்ந்து படித்தீர்களா?

**விஜய்:** 12ம் வகுப்பு முடித்து விட்டு சென்னையில் உள்ள ஒரு கல்லூரியில் ITI படிக்க வந்தேன். அங்கு வந்த பிறகு நான் வருகிற ரூட்டுக்கு நான் தான் பஸ் ''ரூட் தலை'' என்னைச் சுற்றி எப்பொழுதும் 10 பேர், 15 பேர் இருப்பார்கள். மிகவும் ரவுடியாக இருந்தேன். இன்றைக்கு அந்த ரூட் ஓட்டுநர்களிடம் விஜய் என்ற பெயர் கேட்டாலே எல்லோருக்கும் தெரியும். அந்த அளவுக்கு ரவுடிசம் பண்ணிக் கொண்டிருந்தேன். நீ எல்லாம் பிள்ளையாடா என்று என்னை திட்டும் போது, நான் அவர்களிடம், ''நீ உன் புள்ளையை ஓழுங்கா வளருமா... உன் பிள்ளையை உனக்கு வளர்க்க தெரியாம, என்னை திருத்த வந்தாயா'' என்று அவர்களிடமே திருப்பி விடுவேன். அந்த அளவிற்கு நான் பெரிய ரவுடித்தனம் பண்ணுவேன். இப்படி மிகவும் துன்மார்க்கமான வாழ்க்கை தான் வாழ்ந்து வந்தேன்.

*காலேப்:* சரி... ரூட் தலையாக இருந்த உங்கள் வாழ்க்கை எப்படி மாறியது? எப்படி இயேசுவின் ரூட்டுக்கு மாறினீர்கள்?



**விஜய்:** ITI படித்துக் கொண்டிருக்கும் போது, 10 நாட்கள் மிகவும் பெலவீனப்பட்டு படுத்த படுக்கையானேன். சாப்பாடு எதுவும் சாப்பிட முடியாது. எல்லா டெஸ்ட் எடுத்து பார்த்தும் Normal என்று வந்தது. ஆனால் காய்ச்சல் விடவே இல்லை. நீர் ஆகாரம் மட்டுமே சாப்பிட முடியும், மற்றபடி எந்த சாப்பாடும் சாப்பிட முடியாத சூழ்நிலை, அப்படி படுக்கையில் இருக்கும் போது தான், ''பாஸ்டர் ஜெபக்குமார் அவர்கள் சபைக்கு போ'' என்று

யாரோ பேசுவது போல் இருந்தது. அவர் எங்கே இருக்கிறார் என்று தெரியாது. ஆனால் எப்படியோ தேடி கண்டுபிடித்து ஆலயத்திற்கு சென்றேன். அங்கு போன போதும், ஏற்கெனவே அக்கா என்ன சொன்னார்களோ அதே தீர்க்கதரிசனத்தை அந்த பாஸ்டரும் சொன்னார். தாவீதைப் போல கர்த்தர் உன்னை தெரிந்து கொண்டார், கர்த்தர் தன்னுடைய ஜனத்தை மீட்கும்படி உன்னை தெரிந்தெடுத்தார் என்றதும் என்னையுமறியாமல் அந்நிய பாஷை பேசி ஆவியில் நிரம்பினேன். ஆனால் எனக்குள் இது ஆவியானவர் கிடையாது, நீயாகவே பேசுகிறாய் என்கிறதான ஒரு சத்தம் கேட்கிறது. அபிஷேகம் பெற்றது உண்மையா என்பதில் எனக்கு சந்தேகம் வரவே, பாஸ்டர் ஜெபக்குமார் அவர்கள் உன்னை தேவன் அபிஷேகித்தார் என்பதை உணருகிறாயா? என்று கேட்டதும், நான் எதுவும் யோசிக்காமல் கர்த்தர் என்னை அபிஷேகித்தார் என்று சொன்னேன். அன்றிலிருந்து ஆவியானவர் என்னோடு பேச ஆரம்பித்தார். எனக்கு கற்றுக் கொடுக்க யாரும் கிடையாது.



*காலேப்:* சூப்பர்... ஆவியானவோடு இணைந்து வாழ ஆரம்பித்தீர்கள்? இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் எப்படி உங்களை நடத்துகிறார்?

**விஜய்:** கர்த்தர் என்னோடு ஒவ்வொருநாளும் பேசி பேசி எப்படி பரிசுத்தமாக வாழ வேண்டும், எப்படி கர்த்தருக்குள் இருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்து வருகிறார். அபிஷேகம் பெற்ற பின்பு நான் பாவத்தை விட்டு விடவில்லை, பாவம் என்னை விட்டு விலகியது. அபிஷேகம் பெற்ற பின்பு எனது நண்பர்கள் வட்டாரமே முற்றிலும் மாறியது. எப்படி என்றால், எப்பொழுதும் கிரிக்கெட் மைதானம் என்றிருந்த என்னுடைய வாழ்க்கை, அபிஷேகம் பெற்ற பிறகு என்னுடைய கல்லூரி, வீடு, ஆலயம் என்று மாறிவிட்டது. தினமும் 4 மணி நேரம், 5 மணி நேரம் நானும் ஆண்டவரும் என்ற நிலைக்கு வர ஆரம்பித்தது. ஜெப ஆவியை கொடுத்து தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கவும், ஆராதிக்கவும் வைத்து வருகிறார். ஆண்டவரோடு நெருங்க நெருங்க பாவம் என்னை விட்டு விலகியது, ஆண்டவரோடு அதிக நேரம் செலவிட ஆவியானவர் பெலன் கொடுத்தார்.

*காலேப்:* ஓகே... ஆண்டவருக்கும் உங்களுக்கும் உள்ள உறவில் வளர ஆரம்பித்த நீங்கள், ஆண்டவருக்காக என்ன செய்கிறீர்கள்?

**விஜய்:** ஜெபம், வேதம் வாசிப்பு என்று ஆண்டவருக்குள் வளர்ந்தாலும் சுவிசேஷம் சொல்ல வேண்டுமென்ற வாஞ்சை எனக்கு அதிகமாக இருந்தது. ஆனால் எப்படி செய்வது என்று தெரியவில்லை. ஆண்டவரிடம் ஜெபித்த போது ஆண்டவர், ''எனக்காக ஊழியம் செய்வதற்கு முன்பு, எனக்கு ஊழியம் செய்'' என்று சொன்னார். இது எனக்கு புரியவில்லை. ஆண்டவரே எனக்கு புரியவில்லை என்று சொன்னதும், எனக்காக ஊழியம் என்றால், இயேசு இரட்சகர், இயேசு உன்னை நேசிக்கிறார் என்று வெளியே போய் ஊழியம் செய்வது என்றார். அவருடைய பாதத்தில் காத்திருந்து, அவரோடு நேரம் செலவழித்து அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜெபிப்பது அவருக்கு ஊழியம் செய்வது என்று எனக்கு விளக்கி சொல்லிக் கொடுத்தார். இப்படி 7 வருடங்கள் என் ஆவிக்குரிய வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. அதன் பிறகு தான் எனக்கு சுவிசேஷம் அறிவிக்க வாய்ப்பு கிடைத்தது. சென்னை Igniters மூலம் ஒவ்வொரு வாரமும் சென்னை மெரீனா பீச்சில் சென்று கைப்பிரதி ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். இப்பொழுது ஒவ்வொரு வாரமும் கைப்பிரதி ஊழியம் செய்து வருகிறேன். அதுமட்டுமல்லாமல் சென்னை Igniters Fellowship-ல் சென்று இன்னும் அதிகமாக ஜெப வாழ்க்கையில் வளரவும், ஜெபத்தை நடத்தவும் தேவன் கிருபை செய்து வருகிறார்.

*காலேப்:* ஓகே விஜய்... இதுவரைக்கும் உங்களுடைய வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு காரியங்களையும் எங்களோடு பகிர்ந்து கொண்டீர்கள்... வாலிபர் உலகம் வாசகர்களாகிய வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**விஜய்:** World is very Busy! உலகம் மிக விரைவாக ஓடிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் நமது நேரத்தை வீணாக்காமல், உலகக் காரியங்களுக்கு செலவிடாமல், ஆண்டவருடைய பிரசன்னத்தில் காத்திருக்க வேண்டும். தேவ சமூகத்தில் போன உடனேயே ஆண்டவர் பேசமாட்டார், அதற்காக பல நாட்கள், பல மணி நேரங்கள் அவருடைய பிரசன்னத்தில் காத்திருக்கும் போது தான் தேவன் நம்மோடு பேசுவார். எனவே தேவ பிரசன்னத்தில் காத்திருந்து கர்த்தரின் வார்த்தையின்படி செயல்படும் போது ஆவியானவர் ஒவ்வொருநாளும் நடத்திச் செல்வார்.



அன்பான வாலிபர்களே! பிறந்த 2வது நாளில் மரித்து போன சிறுவனுக்கு, ஜீவனைக் கொடுத்தும், வாலிப வயதில் உலகத்திற்கும், நண்பர்களுக்கும் பின்பு போய் கொண்டிருந்த வாட்சன் விஜய் என்ற வாலிபரை, "நீ எனக்கு வேண்டும்" என்று அழைத்து, அபிஷேகித்து பயன்படுத்த முடியுமானால், இன்றைக்கு எப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் இருந்தாலும் உங்களுடைய பாவங்களை கழுவி, பரிசுத்தப்படுத்தி உங்களையும் பயன்படுத்த இயேசுவால் முடியும். ஆனால் நீங்கள் இயேசுவுக்கு உங்களை முழுவதும் விட்டுக் கொடுக்கும் போது தான் உங்களை அவருடைய சித்தத்தின்படி வனைந்து பயன்படுத்த முடியும்!

புதிர்: வில்லியம்

BIBLE Treasure Hunt

# வேதாகம புதையல் வேட்டை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ல் | யே | இ | யா | து | த் |
| ஸ் | சே | வீ | ப | ந | யூ |
| னி | பே | ச | சு | எ | தா |
| ரு | தா | ன | க் | னே | ம |

கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் மேலே உள்ள கட்டத்தில் சென்று சரியான எழுத்தை அம்பு திசை மூலம் கண்டுபிடிக்கவும். இது வேதாகமத்தில் ஒருவரின் பெயர். இவரது பெயர் மற்றும் தேவன் இவரை எப்படி பார்க்கிறார் என்பதை சுருக்கமாக இரண்டு வார்த்தையில் குறிப்பிடுக.

எ ← ← ↑ **வீ** [Example]

இது ஒரு வேதாகமத்தின் நபருடைய பெயர் (இவரது பெயர் மற்றும் தேவன் இவரை எப்படி பார்க்கிறார்) சுருக்கமாக இரண்டு வார்த்தையில் குறிப்பிடுக.

1. ந → ↓ ____
2. னி → ↑ → ____
3. வீ → → ↑ ____

1. பே ↑ ↑ → ____
2. யூ ← ↓ ← ____

1. சு → → ↑ ____
2. க் → → ↑ ____
3. இ → → ↑ ____

1. னே → ↑ ____
2. ன ← ← ↑ ____
3. ஸ் → ↑ ____
4. சே ↑ ← ____

1. க் ← ← ↑ ____
2. சு → ↑ ↑ ____
3. சே ← ↓ ↓ ____

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.07.2023

கடந்த மாத வெற்றியாளர்
சகோதரி **ஷீபா,** (சென்னை)
அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

1. அபியா 2நாளா:13:21
2. தாவீது (II சாமுவேல் 18:33)
3. காயீன் (ஆதியாகமம் 4:17)
4. ஆபிரகாம் (ஆதியாகமம் 21:8), இளையகுமாரனின் தகப்பன் (லூக்கா 15:23)
5. யாக்கோபின் ஜீவன் பென்யமீனின் ஜீவனோடு (ஆதியாகமம் 44:30)
6. ஈசாக்கு [ஆதியாகமம் 25:24]
7. யோவாஸ் (நியாயாதிபதிகள் 6:30,31)
8. அசரியா [1 நாளாகமம் 6 : 10
9. இஸ்ரவேல் [1 நாளாகமம் 5: 1]
10. பராக்கிரமசாலியாகிய யோய்தா [2 சாமுவேல் 23: 20]

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

ஆலோசனை: அவி




# யாருக்கு கீழ்ப்படிய?

**நான் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து இரட்சிக்கப்பட்டேன். இப்பொழுது எனக்கு வயது 30 ஆகிறது. எனது பெற்றோரும் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய சபைக்கு சென்று வருகிறார்கள். ஆனால் என்னுடைய திருமண காரியத்தில் மட்டும் என்னுடைய ஜாதியில் தான் பெண் எடுக்க வேண்டும் என்று சொல்லி வருகிற எல்லா பெண் வீட்டாரையும் வேண்டாம் என்று அனுப்பி வைக்கிறார்கள். நான் இளம் வயதில் ஒரு கூடுகையில் வரதட்சணை வாங்க மாட்டேன், ஜாதி பார்க்க மாட்டேன் என்று ஒப்புக் கொடுத்தேன். ஆனால் என் பெற்றோரின் பிடிவாதத்தால் என் திருமணம் தடைப்பட்டுக் கொண்டு இருக்கிறது, வேறு ஜாதியில் திருமணம் செய்வது தவறா? அல்லது ஜாதி பார்க்க மாட்டேன் என்று நான் எடுத்த தீர்மானம் தவறா? எனக்கு புரியவில்லை. இயேசுவுக்கு கீழ்ப்படிய வேண்டுமா? அல்லது என் அப்பாவுக்கு கீழ்ப்படிய வேண்டுமா? - ஜெபஸ், தருமபுரி.**

அன்பு தம்பி ஜெபஸ்! உங்களின் கடிதம் மூலம் உங்களின் வேதனையான உள்ளமும், மன உளைச்சலும் நன்கு புரிகிறது. தவறான தீர்மானம் எடுத்ததால் பலரின் திருமணம் தடைபடலாம். ஆனால் ஒரு சிறந்த தீர்மானம் எடுத்த எனக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு பிரச்சனையும், தடைகளும் வரவேண்டும் என்று உங்கள் ஆழ்மனதில் நினைப்பது தெரிகின்றது.

ஜெபஸ்! இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அநேகர், அவர்களை அறியாமல் ஒரு அடிமைத்தனத்தில் இருக்கிறார்கள். அது பண ஆசை என்னும் அடிமைத்தனம், தங்கள் ஜாதியை குறித்ததான உயர்வான எண்ணம் கொண்டிருக்கும் அடிமைத்தனம் என இப்படி பல பிரிவுகள் உண்டு.

தாங்கள் ஒரு அடிமைத்தனத்தில் இருக்கின்றோம் என்ற எண்ணமே இல்லாமல், தங்கள் தீர்மானத்தில் உறுதியாய் இருப்பது அவர்களின் அறியாமை. முன் நாட்களில் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குள்ளே திருமணம் செய்து கொள்வார்கள். காரணம் இரு வீட்டாரின் பழக்கவழக்கம், கலாச்சாரம், அணுகுமுறைகள் ஒரே மாதிரி இருந்ததால் அது தேவையில்லாத பிரச்சனைகளை தவிர்க்கும் என்று கருதி அப்படி செய்வார்கள்.

மேலும் வெவ்வேறு சமூகத்தினர்கள் திருமணம் செய்யும் போது, பல மாற்றங்களைக் காண முடியும். அவர்களின் பேச்சு முறை வித்தியாசப்படும், பழக்கவழக்கங்கள் வித்தியாசப்படும், குறிப்பாக உணவு முறை, சாப்பிடும் முறை, மேலும் பண்டிகை நாட்களின் கொண்டாட்டங்கள் என்று இப்படியெல்லாம் பல வித்தியாசங்கள் உண்டு. எனவே புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும் தம்பதியருக்கு இடையே பல விரிசல்களும், சண்டைகளும், குழப்பமான சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் ஒரே சமூகத்தை அல்லது ஒரே ஜாதியை சார்ந்தவர்கள் திருமணம் செய்கின்றனர்.

ஆனால் காலப்போக்கில், இந்த ஜாதி என்பது திருமணத்தில் முக்கிய பங்காக மாறிவிட்டது. யூதனென்றும் இல்லை, கிரேக்கனென்றும் இல்லை என்பதாக வேதம் சொல்கிறது. தேவன் இந்த ஜாதி என்பதை அங்கீகரிப்பதும் இல்லை. ஆனால் கிறிஸ்தவர்களாகிய அநேகர் இந்த தவறான பழக்கத்தை பிடித்துக் கொண்டிருப்பது வேதனையான ஒன்று. மேலும் இந்த காரியத்தை தங்கள் பிள்ளைகள் மேல் திணிப்பது இன்னும் வேதனையான காரியம்.

**இந்த சூழலில் ஜெபஸ், நீங்கள் எடுக்கும் தீர்மானம் தான் மிகவும் முக்கியம். நீங்கள் திருமணத்திற்காக உங்கள் பொருத்தனையை கடைபிடிக்க**



## தந்தை சொல்லுக்கு கீழ்ப்படியும் போது என்ன நடக்கும்?

1. தகப்பனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தீர்கள் என்ற சந்தோஷம் குடும்பத்தில் உண்டாகலாம்.
2. திருமணம் உடனே நடக்கலாம்.
3. உங்கள் தகப்பனுடைய சமூக உணர்வை, நீங்களும் அங்கீகரித்து விட்டீர்கள் என்று எல்லோரும் பேசலாம்.
4. ஆனால் தேவனுடைய சமூகத்தில் நீங்கள் எடுத்த முடிவையும், பொருத்தனையையும் நிறைவேற்ற முடியவில்லையே என்ற குற்றமனசாட்சி உங்களை வாதிக்கலாம்.
5. திருமணம் நடப்பதற்காக நீங்கள் நேசித்த இயேசுவை பேதுரு போல மறுதலித்துவிட்டாயே என்று உள் உணர்வும் சொல்லலாம்.

## ஒருவேளை தந்தை சொல்லுக்கு கீழ்ப்படியவில்லை என்றால் என்ன நேரிடும்?

1. உங்களின் குடும்பத்தில் உங்களின் உறுதியான தீர்மானத்தினால், தொடர்ந்து குழப்பமும், சமாதான குறைவும் வரலாம்.
2. பெற்றோரை கனம் பண்ணாதவன், கீழ்ப்படியாதவன் என்று வேதத்தை வைத்தே உங்களை குறை கூறலாம்.
3. தன் ஜாதியின் மேல் உள்ள வைராக்கியத்தால் தந்தை மகன் உறவுகளில் பிரிவும் ஏற்பட வாய்ப்பு உண்டு.
4. ஒருவேளை உங்கள் தகப்பனுக்கு நீங்கள் பொறுமையாக எடுத்து சொல்வதால், இந்த ஜாதி பார்ப்பதால் தான் தாமதம் என்று உணர்ந்து, ஒருவேளை உங்கள் தகப்பன் மனம் மாறலாம். தகப்பனே திருமணத்தை நடத்தி வைக்கலாம்.
5. ஒருவேளை நீங்கள் ஜெபித்த மாதிரி, ஜாதி பார்க்காமல் திருமணம் செய்தால் உங்கள் தகப்பன் திருமணத்திற்கு வராமல் போகலாம்.
6. என் தகப்பனை திருப்திப்படுத்துவதைவிட, இயேசுவை சந்தோஷப்படுத்தினேன் என்ற எண்ணம் உங்களுக்கு உண்டாகலாம்.

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்தேயு 5:10).
"எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து." (எபேசியர் 2:14).



ஆண்டவருடைய பார்வையில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று இல்லை. தேவன் அருவெருக்கிற ஒன்றை நாம் நேசிப்பதும், பின் பற்றுவதும் தவறு என்பதை உணர்ந்தால் மட்டும் தான், இந்த உலகில் இப்படிப்பட்ட அசுத்தமான கிரியைகள் அழியும்.

## திருமணத்தைக் குறித்து வேதம் கூறும் முக்கியமான மூன்று காரியங்கள்:

**1. 2 கொரி. 6:14 - அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?**

**2. 1 பேதுரு 3:4 - அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.**

**3. நீதி. 31:30 - சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.**

எனவே ஜெபஸ் வேதத்தின் வெளிச்சத்தில் ஜெபித்து செயல்படுங்கள். தீர்மானம் எடுக்க உதவி செய்தவர், தீர்மானத்தில் உறுதியாக நிற்க உதவி செய்வார்.


# கர்த்தரை சார்ந்திரு!




முகப்பு செய்தி: சதீஷ்

நம்பிக்கையற்ற உலகில் ஒவ்வொருநாளும் நம்மை சுற்றி போராட்டங்கள், நெருக்கங்கள், பொருளாதார பிரச்சனைகள் என பலவிதமான இக்கட்டான சூழ்நிலைகள் நம்மை சூழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவை எல்லாவற்றிலிருந்தும் தப்பி செல்ல கர்த்தரை சார்ந்து இருப்பதுதான் ஒரே வழி. ஒருவேளை நீங்கள் தற்போது பள்ளிப் படிப்பை முடித்து விட்டு, அடுத்து எந்த கல்லூரியில் சேரலாம் என யோசித்துக் கொண்டு இருக்கலாம், அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வேலைக்காகவோ, மேற்படிப்பிற்காகவோ காத்திருக்கலாம். நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் சரி இயேசுவை சார்ந்து கொள்ளுங்கள், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்!







உங்களுக்கு நல்ல தாலந்துகள், படிப்பு, அறிவு, பண பலம், மனிதனுடைய செல்வாக்கு இவை எல்லாம் இருக்கலாம். ஆனால் இவற்றை எல்லாம் நம்பி இருந்தால் உங்களால் வெற்றி பெற முடியாது. இவை எல்லாவற்றையும் உங்களுக்கு அருளின தேவனை முதலாவது சார்ந்து வாழ பழகுங்கள் வெற்றிப் பெறுவீர்கள்.

எசேக்கியா தன்னுடைய 25வது வயதில் இஸ்ரவேலின் இராஜாவானார். **"அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" (I இராஜா. 18:3).** எசேக்கியாவிற்கு விரோதமாக அசரீயா இராஜா சனகெரிப் தன் படைகளோடு வந்து, தேவனை தூஷித்து, மக்களை திடனற்று போக செய்த போது, எசேக்கியா தன்னிடத்தில் இருந்த படை பலத்தையும், செல்வத்தையும், அவனுடைய ஸ்தானாதிபதிகளின் ஆலோசனையையும் கேளாமல் முதலாவது தேவனுடைய ஆலயத்திற்கு சென்று **"இப்போதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம் பண்ணினான்" (2 இராஜா. 19:19).**

எசேக்கியா தனக்கு உண்டான யாவற்றையும் சார்ந்து இருக்காமல், கர்த்தரை சார்ந்து இருந்ததால் மாபெரும் யுத்தத்தில் ஆண்டவர் அவனுக்கு துணை நின்று யுத்தம் செய்தார். எசேக்கியா தனக்கு நெருக்கம் உண்டான சூழ்நிலையில், **"கர்த்தரை விட்டுப்**



**பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று;..." (இராஜா. 18:6,7).** உங்களுடைய எல்லா இக்கட்டான சூழ்நிலையிலும் நீங்கள் கர்த்தராகிய இயேசுவை சார்ந்து இருக்கும் போது பயப்பட வேண்டியதில்லை, கலங்க வேண்டியதில்லை. உங்களுடைய எதிர்கால படிப்பு, வேலை, திருமணம் என எல்லாவற்றிலும் அவர் உங்களோடிருந்து உங்கள் காரியங்கள் எல்லாவற்றையும் அனுகூலமாக்கி தருவார்.

பொதுவாக இன்றைக்கு அநேக மனிதர்கள் தங்களுடைய பெலத்தையும் ஞானத்தையும் நம்பி வாழ முடியும் என்ற தவறான நம்பிக்கையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட நம்பிக்கையில் வாழும் மனிதர்கள் கர்த்தரை விட்டு விலகி இருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். **"மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 17:5).** கர்த்தரை சார்ந்து இல்லாமல் அவரை விட்டு விலகி இருப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதம் சொல்கிறது. மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தரின் மேல் நம்பிக்கை வைக்கிற மனுஷன் பாக்கியவான். உங்கள் நம்பிக்கை யார் மீது இருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள்? கர்த்தரை சார்ந்திருந்த எசேக்கியா ராஜாவைப் போல அவனுக்கு முன்னும் பின்னும் ஒருவரும் எழும்பினது இல்லை. எசேக்கியாவைப் போல நீங்கள் கர்த்தரை சார்ந்து இருக்கும் போது உங்களுடைய காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றிப் பெறுவீர்கள்.

பாவம் நிறைந்த இந்த உலகத்தில் உங்கள் சுய பெலத்தினால் நீங்கள் பரிசுத்தமாய் வாழ முடியாது. உலகில் இருக்கும் அசுத்தங்கள், விபச்சாரம், வேசித்தனம், காமவிகாரம், இச்சைகள், சாத்தானின் கண்ணிகளுக்கு நீங்கள் விலகி பாதுகாக்கப்பட வேண்டுமானால், கர்த்தரையே சார்ந்து வாழ பழக வேண்டும். யோசேப்பின் வாழ்வில் ஒவ்வொருநாளும் பாவம் அவனை நெருங்கி கொண்டே இருந்தது. ஆனால் அவன் கர்த்தரை விட்டு விலகவில்லை, கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவன் பாவத்தை விட்டு விலகி ஓடினான். எகிப்து தேசத்தில் அடிமையாக போன யோசேப்பு கர்த்தரை சார்ந்து இருந்ததால், அந்த தேசத்தில் காணப்பட்ட அருவெருப்புகள், பாவ சுபாவங்கள், விக்கிரக ஆராதனை, வேசித்தனம், மனுஷடைய சூழ்ச்சிகள் இவை எல்லாவற்றிருக்கும் விலக்கி தன்னை காத்துக் கொள்ள முடிந்தது. அதுமட்டுமன்றி அவன் மீது தேவன் வைத்திருந்த தரிசனத்திட்டத்தை நிறைவேற்றி அந்த தேசம் முழுமைக்கும் ஆசீர்வாதமாக இருந்தான்.

**எனக்கன்பான வாலிபர்களே! படிப்பும், பட்டங்களும் திறமையை வளர்ப்பதும் நமக்கு கட்டாயம் தேவை. ஆனால் ஒரு நாளும் நம்முடைய சொந்த பெலனும், ஞானமும் நமக்கு உதவி செய்யாது என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். சவால்களும், போராட்டமும், அசுத்தங்களும் நிறைந்த இந்த உலகத்தில் நீங்கள் பரிசுத்தமும் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமானால் யோசேப்பு மற்றும் எசேக்கியாவைப் போல உங்களுடைய எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரைச் சார்ந்து இருந்தால் போதும், "கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்" (நீதி. 3:26).**



# தேவனை சார்ந்திருந்தால், தேவையைச் சந்திப்பார்!



செய்தி: மோகன் சி. லாசரஸ்

**"வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" (சங்கீதம் 121:2).**

உங்கள் வாழ்க்கையில் ஏதோவொரு காரியத்தில், 'எங்கிருந்து எனக்கு இந்த உதவி வரும்? எங்கிருந்து எனக்கு ஒத்தாசை கிடைக்கும்?' என்று நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம். 'எனக்கு இவ்வளவு தேவை இருக்கிறதே; யார் எனக்கு உதவி செய்வார்கள்?' என்று உங்கள் உள்ளத்தில் கேள்வி எழும்பியிருக்கலாம். அல்லது, நீங்கள் யாரிடத்திலிருந்து உதவி வருமென்று எதிர்பார்த்தீர்களோ, அவர்கள் உதவி செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கலாம். வாக்குக் கொடுத்தவர்கள் மறந்திருக்கலாம். ஆனால், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும் என்று கர்த்தர் சொல்கிறார். கர்த்தரிடத்தில் இருந்து வரக்கூடிய உதவியை யாருமே தடுக்க முடியாது. அவர் ஆச்சரியமாய் நமக்கு உதவி செய்கிற தேவன்.

கர்த்தர் மனிதர்கள் மூலமாக, பல நன்மைகள் செய்வது உண்மை. ஆனால் நம்முடைய விசுவாசம் கர்த்தர் மேல் மாத்திரம் இருக்க வேண்டும்.



**"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்" (சங்கீதம் 121:1).** கர்த்தர் நமக்கு ஒத்தாசை அனுப்புகிறவர், அவர்தான் நமக்கு எல்லாவற்றையும் செய்கிறவர், அவர்மேல் நம் கண்கள் இருக்க வேண்டும். ஆனால் அநேக நேரங்களில் கர்த்தர் மேல் வைக்கப்பட்டிருக்கிற நம்முடைய கண்கள் நமக்கே தெரியாமல் மனிதர்கள் பக்கமாக திரும்பி விடும்.

கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்த போது, என்னுடைய தனிப்பட்ட தேவையாக இருந்தாலும், ஊழியத் தேவையாக இருந்தாலும், நான் உம்மைதான் நோக்கிப் பார்ப்பேன். எனக்கு ஒரு ஐந்து பைசா வேண்டுமென்றாலும் நான் யாரிடமும் போய் கையேந்தி நிற்கக் கூடாது. நீர் தான் என் தேவையை சந்திக்க வேண்டும்' என்று சொல்லி ஆண்டவரிடத்தில் ஒரு விண்ணப்பம் வைத்து ஊழியத்திற்கு என்னை ஒப்புக் கொடுத்தேன். 'நாளைய தினத்தைக் குறித்து நீ கவலைப்படாதே, அனுதினமும் உன் தேவையைச் சந்தித்து, உன்னை நடத்துவேன், நீ பயப்படாதே' என்று கர்த்தர் எனக்கு வாக்குக் கொடுத்தார். அந்த வாக்குத்தத்தத்தை நம்பிதான் ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்து கடந்து வந்தேன்.

1978ம் ஆண்டு ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, 1980ம் வருடத்தில் 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கை ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. ஒருநாள் ஆண்டவர் நான் கொடுக்கிற செய்திகளை பத்திரிக்கையின் மூலமாக ஜனங்களுக்கு அறிவி, அதன்மூலம் அநேக மக்களை இரட்சிப்பேன் என்று எனக்கு வாக்குக் கொடுத்தார். பத்திரிக்கை வெளியிடும்

போது சந்தா கேட்கக்கூடாது, கேட்கிற எல்லாருக்கும் இலவசமாக அனுப்பு, யார் யாருடைய உள்ளத்தில் நான் ஏவுகிறேனோ அவர்கள் காணிக்கை அனுப்பி ஊழியத்தை தாங்குவார்கள் என்று கர்த்தர் சொன்னார். நான் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆரம்பித்தேன்.

முதல் மாதம் 300 பத்திரிக்கையில் ஆரம்பிக்கப்பட்டு, ஆயிரங்களாக பெருக ஆரம்பித்தது. சில மாதங்களுக்கு பிறகு ஒருநாள் பிரிண்டிங் பிரஸ்ஸில் உள்ள சகோதரர் பத்திரிக்கை பிரிண்டிங் செய்த பணத்தை கேட்டு எங்கள் வீட்டிற்கு வந்தார். அவரிடம் கொடுக்க என்னிடம் பணம் இல்லை. எனவே நானே சீக்கிரத்தில் கொண்டு வந்து தருவதாக கூறி அவரை அனுப்பினேன். தினந்தோறும் 11 மணிக்கு மேல் Postman கடிதங்களும், Money order-ம் கொண்டு வருவார். அதில் வருகிற பணத்தை வைத்து அவருக்கு காசை கொடுத்து விடலாம் என்று நினைத்து காத்திருந்தேன். அன்றைக்கு ஏராளமான கடிதங்கள் வந்ததே தவிர ஒரு Money orderம் வரவில்லை. Postmanயும், அவர் கொண்டு வரும் Money orderம் நம்பியிருந்த எனக்கு மிகப் பெரிய ஏமாற்றமே காத்திருந்தது. இந்த பணத்தை எப்படி கொடுப்பேன் என்ற கலக்கத்தோடு என் அறைக்கு சென்று முழங்கால்படியிட்டு ஆண்டவரை நோக்கி ஜெபித்தேன். அப்போது ஆண்டவர் 'நீ என் மீது நம்பிக்கை வைத்திருக்கிறாயா? காணிக்கை அனுப்புகிற மனிதர்கள் மேல் உன் நம்பிக்கை வைத்திருக்கிறாயா?' என்று பேச ஆரம்பித்தார். என் கண்கள் என்னை அறியாமலேயே தேவனை விட்டு விலகி, உதவி செய்கிற மனிதர்கள் மேல் போய் விட்டது என்று அப்போது தான் எனக்கு தெரிந்தது. தேவனை விட்டு நம்முடைய விசுவாச கண்கள் விலகுவது நமக்கே தவறாக தெரியாது. ஆனால் ஆழமாக நோக்கும்போது தான் அதிலுள்ள தவறு விளங்கும்.

நான் என்னுடைய தவறை உணர்ந்து 'என்னை மன்னியும்' என்று கண்ணீர் விட்டு அழுதேன். என் நம்பிக்கை நீர் தான். நீர் தான் 'உன் தேவையை சந்திப்பேன்' என்று வாக்குக் கொடுத்தீர். என் கண்கள் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரை நோக்கி தான் இருக்க வேண்டும். ஆனால் அதை விட்டு விட்டு, எனக்கு பணம் அனுப்புகிற, உதவி செய்கிற மனிதர்கள் மேல் பார்வை போய்விட்டது. அந்த தவறை எனக்கு மன்னியும் என்று கண்ணீரோடு என் தவறை அறிக்கை செய்து நான் ஜெபம் செய்தேன். ஜெபம் பண்ணி முடித்த போது, ஒரு சகோதரர் என் வீட்டிற்கு வந்து இந்த காணிக்கையை உங்களுக்கு கொடுக்கும்படி கர்த்தர் என்னோடு பேசினார். எனவே இந்த காணிக்கையை கொடுத்துவிட்டு போகலாம் என்று வந்தேன் என்றார். நான் அந்த காணிக்கையை பார்க்கும் போது நான் எவ்வளவு பணம் பிரஸ்க்கு கொடுக்க வேண்டியதிருந்ததோ அந்த பணம் அந்த கவரில் இருந்தது. என் கண்களில் ஆனந்த கண்ணீர் வடிந்தது. அப்போதுதான் கர்த்தர் சொன்னார், நான் தான் உன் தேவையை சந்திக்கிற தேவன். என்னிடத்தில் இருந்து உனக்கு ஒத்தாசை வரும். ஆனால் உன் கண்கள் எப்போதும் என்மேல் இருக்க வேண்டும். உன் விசுவாசம் என்மேல் இருக்க வேண்டும் என்பதை கர்த்தர் கற்றுக் கொடுத்தார். அதில் இருந்து இன்றைக்கு வரைக்கும் என்னுடைய எல்லா தேவைக்கும் கர்த்தருடைய சமூகத்தில் அவரை மட்டுமே நோக்கி பார்க்கிறேன்.

எலியா கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்த போது, தேவன் காகங்களைக் கொண்டு எலியாவைப் போஷித்தார். காகங்கள் காலையும் மாலையும் அவருக்குத் தவறாமல் அப்பமும், இறைச்சியும் கொண்டு வந்து கொடுத்தன. துவக்கத்தில் காகங்களைக் கொண்டு தன்னை ஆச்சரியமாக போஷிக்கும் ஆண்டவர் மீது அவருக்கு அளவற்ற நம்பிக்கையும் விசுவாசமும் இருந்திருக்கும். ஆனால் நாட்கள் செல்ல செல்ல இது வழக்கமானவுடன் காலையும் மாலையும் இந்த நேரத்தில் நிச்சயம் காகம் உணவு கொண்டு வரும் என்று காகத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்திருப்பார் எலியா. கர்த்தர் கொடுப்பார் என்று மேலே பார்க்க வேண்டிய எலியா, இப்போது காகம் வரும் திசை பக்கமாக பார்க்க ஆரம்பித்திருப்பார். எனவே ஆண்டவர் காகங்களை கொண்டு போஷிப்பதை நிறுத்தி விட்டு எலியாவை சாறிபாத்துக்கு போகச் சொல்கிறார். அங்கே ஒரு விதவையைக் கொண்டு போஷிப்பதாகவும் வாக்குக் கொடுக்கிறார். தேவன் நமக்கு உதவி செய்ய யாரை வேண்டுமானாலும் பயன்படுத்துவார். காகம் இல்லாவிட்டால் விதவையை பயன்படுத்த அவரால் முடியும். ஆனால் நம்முடைய கண்கள் கர்த்தர் மேல் மட்டுமே இருக்க வேண்டும்.

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு உங்கள் நம்பிக்கை யார் மீது? உங்கள் பிள்ளைகள் மீதா? உங்கள் சொந்தக்காரர்கள் மீதா? உங்கள் நண்பர்கள் மீதா? யாரோ ஒருவர் தருவேன் என்று சொன்னாரே அவர் மீதா? நீங்கள் கர்த்தர் மேல் உங்கள் கண்ணை பதிக்கும் போது, அவர் யாரைக் கொண்டாவது உங்கள் தேவையை சந்திப்பார். அவரையே சார்ந்திரு!**



# நாளை நமதே!

ZOHO

சாதனை: சுமா



விடாமுயற்சியுடன் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கும் இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். வெற்றிப் பயணம் செய்ய ஆசைப்படுகிறீர்களா? முதலாவதாக, உங்களுக்கான ஒரு புதிய பாதையை உருவாக்குங்கள். இரண்டாவதாக, அந்த புதிய பாதையை, கடக்க முடியாதபடி இருக்கும் கற்கள், முள்ளுகள், தோல்விகள், ஏமாற்றங்கள் சோம்பேறித்தனம் போன்றவற்றை, அந்த பாதையை விட்டு முற்றிலும் அகற்றி விடுங்கள், இப்பொழுது மகிழ்ச்சியாக வெற்றி நடைபோடலாம். நீங்கள் வெற்றிப் பாதையை அமைக்க ஒரு சாதனையாளரின் வெற்றிப் பாதை உங்களுக்காக...

ஒரு சிறிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் ஸ்ரீதர் வேம்பு. தன்னுடைய பள்ளிப் படிப்பை அரசு உதவிப் பெறும் பள்ளியிலும் கல்லூரிப் படிப்பை சென்னையிலும் பயின்றார். இவர் கலிஃபோர்யாவின் சான் டியாகோவில் உள்ள குவால்காம் நிறுவனத்தில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். இதையடுத்து தன்னுடைய சொந்த நாட்டில் தொழில் தொடங்க ஆசைப்பட்டார். இவரின் ஆசையின் விளைவாக சென்னையில் Startup நிறுவனத்தை ஒரு கனவோடு தனது சகோதரருடன் இணைந்து தொடங்கினார்.

புதிய செயலாக்கத்தில் தொடங்கின 'வேம்பு Software' நல்ல வளர்ச்சியைக் கண்டது. இதனால் வேம்பு வாடிக்கையாளர்களை கவர மென்பொருள் சேவையிலும் முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கினார். இதனால் அதிகளவு வாடிக்கையாளர்களை மிக விரைவில் சம்பாதித்தார்.




2000ஆம் ஆண்டிலேயே இந்நிறுவனம் மில்லியன் டாலர்களில் வர்த்தகம் மேற்கொள்ளும் அளவுக்கு வளர்ந்தது. மென்பொருள் சேவை வழங்கும் நிறுவனங்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருந்தன. இந்த நிலையில் ஸ்ரீதர் வேம்புவின் நிறுவனம் கடினமாக உழைத்து வாடிக்கையாளர்களை அதிகமாக ஈர்க்கத் தொடங்கியது. 2009ஆம் ஆண்டு ZOHO Corporation என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கிராமப்புற மாணவர்களுக்கு தொழில்சார் மென்பொருள் மேம்பாட்டு கல்வியை வழங்க 2004ஆம் ஆண்டில் ZOHO Schoolயை நிறுவினார்.



இவருடைய ZOHO மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிபவர்களில் 15 முதல் 20% கல்லூரிகளில் பட்டம் பெறாத பள்ளி மாணவர்கள் ஆவார். இவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து ZOHO நிறுவனம் மாணவர்களை உயர்த்தியுள்ளது.

2020ல் இலவச ஆரம்பக் கல்வியை மையமாகக் கொண்ட ''கிராமப்புற பள்ளி தொடக்கத்தை'' அறிவித்தார். தற்போது ZOHO நிறுவனம் பில்லியன் டாலர்களில் வருவாய் ஈட்டும் வெற்றிகரமான நிறுவனமாக இயங்கி வருகிறது. உலகம் முழுவதும் சுமார் 10,000 பேருக்கு மேல் ZOHO நிறுவனத்தில் பணிபுரிகின்றன. ஸ்ரீதர் வேம்பு சர்வதேச அளவில் 59வது மிகப் பெரிய பணக்கார இந்தியர் ஆவார். இந்திய அரசின் மிக உயரிய விருதான பத்மஸ்ரீ இவருக்கு வழங்கப்பட்டது.




**இதை வாசிக்கும் வாலிபர்களே! ஒரு சிறிய நிறுவனமாக தொடங்கப்பட்டு இன்று அனேக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் நிறுவனமாக ZOHO நிறுவனம் திகழ்கிறது. இதற்கு காரணம் ஸ்ரீதரின் விடாமுயற்சி, அயராத உழைப்பு. இவை இரண்டுமே ஸ்ரீதருக்கு ஒரு புதிய பாதையை உருவாக்கி அதில் வெற்றி நடைபோட வைத்தன. நீங்களும் முயன்றால் பாதையும் உருவாக்க முடியும். அதின்மேல் நடையும் போட முடியும். வெற்றி பாதையை உருவாக்க தயாரா உள்ளீர்களா? இதோ உங்களுக்கான வாய்ப்பு!!!**



# மருத்துவர்கள் தினம்

பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள பாங்கிப்பூரில் 1882-ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி பிறந்தவர், பிதான் சந்திர ராய். இவர் கொல்கத்தா மருத்துவக் கல்லூரியில் படித்தவர். அதுவும் ஒரே சமயத்தில் மருந்தியல் மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவத்திற்கான எம்.ஆர்.சி.பி. மற்றும் எம்.ஆர்.சி.எஸ். ஆகிய படிப்புகளை, இரண்டு ஆண்டுகள் மூன்று மாதங்களில் படித்து சாதனை படைத்தவர். இவர் மேற்கு வங்க மாநிலத்தில் இரண்டாவது முதல் அமைச்சராக பணியாற்றியவர். இவரது நினைவாக 1991ம் ஆண்டு முதல் தேசிய மருத்துவர்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

## தேசிய மருத்துவர்கள் தினத்தின் முக்கியத்துவம் :

- 24 மணி நேரமும் வேலை செய்து தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பல உயிர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.
- தங்கள் சொந்த பாதுகாப்பு மற்றும் குடும்பத்தின் பாதுகாப்பு பற்றி சிந்திப்பதற்கு பதிலாக, அவர்கள் தேசத்திற்கு சேவை செய்வதில் முழு கவனம் செலுத்துவார்கள்.

*நெருக்கடியின் நேரத்தில் அயராது உழைத்த மருத்துவர்களை நினைவுகூரும் இந்நாளில் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்!*

# வாலிபர் உலகம்

## பத்திரிக்கை உங்களுக்கு வேண்டுமா?




வாலிபர்களுக்கென்று பிரத்யேகமாக
மாதந்தோறும் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம்,
கன்னடம், தெலுங்கு மொழிகளில் ஒவ்வொரு மாதமும் புதுப் புது பொலிவுடன் வாலிபர்களைப் படிக்கத் தூண்டும் இதழாக வாலிபர்களுக்கு ஏற்ற விதத்தில் வெளி வந்துகொண்டிருக்கிறது.
உங்களுக்கு மாதந்தோறும் வாலிபர் உலகம் பத்திரிக்கை வேண்டுமானால் எந்த மொழியில் வேண்டும் என்பதை ✔ டிக் பண்ணி, உங்களுடைய பெயர், வீட்டு நம்பர், தெரு பெயர், மாவட்டம், பின் கோடு நம்பர் மற்றும் மொபைல் நம்பருடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள Whatsapp எண்ணிற்கு போட்டோ எடுத்து அனுப்பவும்.

**Youth.jesusredeems.com என்ற வெப்சைட்டில் டவுன்லோடு செய்யலாம்**

**Online- இல் சந்தா செலுத்த youth.jesusredeems.com**

- தமிழ் ☐
- ஆங்கிலம் ☐
- ஹிந்தி ☐
- மலையாளம் ☐
- கன்னடம் ☐
- தெலுங்கு ☐

**சந்தா விவரம்**

₹ 100 - 1 வருட சந்தா
₹ 200 - 3 வருட சந்தா
₹ 1000 - ஆயுள் சந்தா

**தொடர்புக்கு**
**9750955547**

**PAY THROUGH UPI**
**UPI ID: JESUSREDEEMS@SBI**





# THRILL IPL




ஏப்ரல் மே மாதம் வந்தாலே இந்தியாவில் அனைவருக்கும் ஒரு **Fever** வரும். அதுதான் ஐ.பி.எல் **Fever**. எல்லா வருடத்தை விட இந்த ஆண்டு **Hype** கொஞ்சம் அதிகமாகவே தான் இருந்தது. தோனியோட கடைசி ஐ.பி.எல் ஆக கூட இருக்கலாம் என்பதால் கொஞ்சம் அதிகமாக இருந்திருக்கலாம். 'ஈ சாலா கப் நம்தே' என்று இதுவரை கோப்பையை வெல்லாத அணிகளும், அதன் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தனர். இப்படி சுவாரஸ்யமாக ஆரம்பித்து விறுவிறுப்பாக நடந்த போட்டிகளில் சென்னையும், குஜராத்தும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இந்த இறுதிப் போட்டி மூன்று நாட்கள் (மழையின் காரணமாக) நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் கடைசி பந்து வரை யார் வெற்றி பெறுவார்கள் என்று கணிக்கவே முடியவில்லை. கடைசி 2 பந்துகளில் 10 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் சென்னை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ரவீந்திர ஜடேஜா களத்தில் இருந்தார். கடைசி ஓவரின் 4வது பந்து வரை சிறப்பாக பவுலிங் செய்து 3 ரன்கள் மட்டுமே கொடுத்திருந்தார் குஜராத் அணியின் பவுலர் மோகித் சர்மா. அநேகர் குஜராத் அணிதான் கோப்பையை வெல்லும் என்றும் நினைத்திருந்தனர்.



இந்த நிலையில் ஜடேஜாவின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை யோசித்து பாருங்கள். வெற்றி பெற்றால் பாராட்டுவார்கள்; இல்லையென்றால், கடுமையான விமர்சனங்களை சந்திக்க வேண்டியது வரும் என்றெல்லாம் ஓடிக் கொண்டிருந்திருக்கக் கூடும். ஆனால் அந்த சூழலிலும் நம்பிக்கை இழக்காமல், பதற்றப்படாமல் வெற்றி ஒன்றையே தன் இலக்காக வைத்து தன்னை நோக்கி வந்த பந்துகளை **Six**ம், **Four**மாக விளாசி, சென்னை அணி 5வது முறையாக **IPL** கோப்பை வெல்ல உதவி செய்தார்.

அன்பு வாலிபர்களே! இன்றைக்கு இருக்கும் இளம் தலைமுறையினர் சின்ன சின்ன காரணங்களுக்காக (தேர்வில் தோல்வி, பெற்றோர் திட்டுவது, பிடித்த பொருளை பெற்றோர் வாங்கி தராமல் இருப்பது) தவறான முடிவுகளை எடுப்பதை செய்திகளில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு காரணம்: பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள பயந்து அத்தகைய முடிவுகளை எடுக்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் தாவீது என்கிற வாலிபன் கர்த்தரை நோக்கி, **"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" (2 சாமு. 22:30)** என்று விசுவாசத்தோடு சொல்கிறார். ஏனென்றால், கர்த்தர் அவரோடு இருந்து எல்லாவற்றிலும் ஜெயம் கொடுத்தார். அதே இயேசு இன்று உங்கள் தோல்விகளை, ஏமாற்றங்களை மாற்றுவார். அதற்கு நீங்கள் உங்கள் வழியையும், வாழ்வையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும் போது, அவரே காரியத்தை வாய்க்கச் செய்வார். எல்லாவற்றையும் மேற்கொள்ள தைரியத்தையும், விசுவாசத்தையும் தருவார்.

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13).**



# பின்தொடர் கூடுகை

## தமிழ்நாடு, கேரளா



நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில், கடந்த மே மாதம் 2023, 6 & 7 தேதிகளில் "தமிழ்நாடு எழுப்புதலைப் பற்ற வைப்போர் பின்தொடர் கூடுகை" நடைபெற்றது. இதற்கு முன்பதாக நடைபெற்ற Tamilnadu Igniters முகாமில் கலந்து கொண்ட வாபர்களில் சுமார் 590 பேர் இந்த முகாமில் கலந்து கொண்டார்கள். 7 மண்டலங்களிலிருந்து (சென்னை, கோவை, திருநெல்வேலி, மதுரை, சேலம், கடலூர் மற்றும் திருச்சி) வந்திருந்த Igniters தங்கள் ஊழிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

இதேபோல் மே மாதம் 23, 24 தேதிகளில் கேரளாவிலிருந்து சுமார் 500க்கும் அதிகமான Igniters கலந்து கொண்டு, கேரளாவில் தாங்கள் செய்த ஊழிய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இவ்விரு கூடுகையிலும் சகோ. மோகன் சி. லாசரஸ் மற்றும் சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள் எழுப்புதல் நாட்களில் இன்னும் தீவிரமாக சுவிசேஷம் அறிவிப்பதற்கான நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தனர். வந்திருந்த வாலிபர்கள் புதிய அபிஷேகத்தையும் வல்லமையையும் பெற்று இன்னும் வைராக்கியமாய் எழுப்புதலுக்காய் செயல்படுவோம் என்ற தீர்மானத்துடன் கடந்து சென்றனர்.




























# சம்கார்

வாசிக்க: நியா. 3:31; 5:6-8



வேதாகம கதாபாத்திரம்: பெனிட்டா

**யோசுவாவிற்கு பிறகு ஒத்னியேல், ஏகூத், சம்கார் என பல நியாயாதிபதிகளை தேவன் எழுப்பினார். இரண்டு நியாயாதிபதிகளைக் குறித்து கடந்த மாதங்களில் பார்த்தோம். இந்த மாதம் 3வது நியாயாதிபதியாகிய சம்கார் என்பவரைப் பற்றிப் பார்க்க போகிறோம்.**

## அறிமுகம்

சம்கார் ஆனாத்தின் குமாரன். சம்காரின் நாட்களில் ஆவிக்குரிய வறட்சியும், பொருளாதாரத்தில் மந்த நிலையும், எதிரிகளைக் குறித்த பயமும் திகிலும் இருந்தாலும் அவன் அவர்களுக்கு நடுவில் தேவ மனிதனாக வாழ்ந்து வந்தான் (நியா. 5:5,6).

## சாதனை மற்றும் பெலன்

- சம்கார் நியாயாதிபதியாக இருந்த போது, பெலிஸ்தரோடு போரிட்டு 600 பேரை தாற்றுக் கோலால் (காளை மாடுகளை ஏர்பூட்டி நிலத்தை உழும் போது, மாடுகளை விரட்ட பயன்படுத்தும் தடியால்) கொன்று இஸ்ரவேலர்களை இரட்சித்தார். சம்கார் கையில் இதைத் தவிர வேறு ஒரு ஆயுதமும் இல்லாமல் இருந்திருக்கலாம்.
- அவன் மாடுகளை வைத்து வேலை வாங்குகிற ஒரு விவசாயியாகவும் இருந்திருப்பார்.
- சாதாரணமான இந்த தடியால் 600 பேர்களை கொன்று போடுவது சாதாரண காரியம் அல்ல. தேவ பலம் இருந்தால் ஒழிய இதை செய்ய முடியாது.




## நாம் கற்றுக் கொள்ளும் பாடம்

நம் கையில் தேவன் என்ன கொடுத்திருக்கிறாரோ, அதை வைத்துக் கொண்டு தேவனால் நம்மை வல்லமையாக பயன்படுத்த முடியும்.

நமக்கு கொடுத்திருக்கும் வேலைகளில், பொறுப்புகளில் உண்மையாக இருக்கும் போது தேவன் அவருடைய சிறப்பான சேவைக்காக நம்மையும் பயன்படுத்த முடியும் என்பதை சம்காரின் வாழ்க்கை நமக்கு கற்றுத் தருகிறது.

வேதத்தில் ஓரிரு இடங்களில் சம்கார் பெயர் இடம் பெற்றிருக்கிறது. நாமும் கூட அடையாளம் தெரியாமல், எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒரு வேலையை அல்லது கர்த்தருடைய வேலையை செய்து கொண்டிருந்தாலும், நியாயாதிபதியாகிய சம்காரைப் போல நம்முடைய பேரும் கர்த்தடைய புத்தகத்தில் இடம் பெற முடியும்.



நிகழ்வு: கெத்சி கிளார்வின்

# யோசனையில் பெரியவர்

# கிதியோன்

வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக யுத்தங்களும் போராட்டங்களும் வந்த போது, அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளைப் பற்றி இந்த "யோசனையில் பெரியவர்" என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். அதின் வரிசையில் இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் பகுதி வெட்டுக்கிளிகளைப் போல திரளான போர்வீரர்கள் இருக்கையில்; அவர்களது ஒட்டகங்கள் மட்டுமே கடற்கரை மணலைப்போல திரளாய் இருக்கையில்; போதுமான ஆயுதங்களின்றி, போதுமான யுத்த வீரர்களின்றி, வெறும் 300 பேரை வைத்து திரள் சேனையை வென்ற இஸ்ரவேலர்களின் சரித்திரம் உங்களுக்கு தெரியுமா? ஆம்! ஒரு மனிதன் கர்த்தரை சார்ந்துக் கொண்டு அவரின் யோசனைகளுக்கு கீழ்ப்படிந்து காரியத்தை நடப்பிக்கும் போது வெற்றி நிச்சயமே!

## கிதியோனும் 300 பேரும்!

இஸ்ரவேலர்களுக்கு எதிராக மீதியானியரும், கிழக்கத்தி புத்திரரும், அமலேக்கியரும் பெரும் சேனையாக போருக்கென பாளையமிறங்கினர். இச்சூழ்நிலையில் யோசனையில் பெரியவரான நம் கர்த்தர், யுத்தத்திற்கு செல்ல ஓர் தகுதியும் இல்லாத சாதாரண மனிதனாகிய கிதியோனைக் கொண்டு மாபெரும் விடுதலையை இஸ்ரவேலர்களுக்கு கொடுத்தார்.

## இதற்கு முக்கிய காரணம் என்னவென்று நீங்கள் யோசித்தது உண்டா?

"... உன்னோடேகூட வரலாம் என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடே கூட வரக்கடவன்; உன்னோடே கூட வரலாகாது என்று யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வராதிருக்கக் கடவன்" (நியா. 7:4) என்று கர்த்தர் உரைத்ததும், எந்தவித சாத்திய கூறுகளையும் பார்க்காமல், கிதியோன் கர்த்தரையே சார்ந்துக் கொண்டார். இதன் விளைவே, பெரும் திரள் சேனை கிதியோனின் சேனைக்கு முன்பாக கலங்கடிக்கப்பட்டது.

அன்பு வாலிபர்களே! "யாரோடு நான் பழகுவது, இந்த காரியத்தில் நான் என்ன முடிவு எடுப்பது? இவர்களுக்கு நான் என்ன பதிலளிப்பது? நான் இருக்கும் இடத்தில் எப்படி சாட்சியாய் ஜீவிப்பது?" என இது போன்ற பல கேள்விகளை அன்றாடம் நாம் சந்தித்துக் கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட தருணத்தில், நீங்கள் ஒவ்வொரு முறையும் சுயமாய் முடிவெடுத்து சோர்ந்துப்போகிறீர்களா? அல்லது ஒவ்வொரு முறையும் அவரிடம் யோசனைகளைக் கேட்டு சரியானவற்றையே செய்து முடிக்கின்றீர்களா? என்று சற்று சிந்தியுங்கள்!

ஏனென்றால், கிதியோனின் சேனையானது கர்த்தரின் யோசனைக்கு செவிக்கொடுத்து, கர்த்தரை சார்ந்துக்கொண்டு, கையில் தீவட்டிகளையும் பானைகளையும் எக்காளங் களையும் கொண்டு யுத்தக்களத்தில் நின்றனர். எந்தவொரு காரியமும் ஜெயமாய் முடிவதற்கு கீழ்ப்படிதல் மிக அவசியம்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே! கர்த்தர் உன்னிடம் பேசுவதை கவனிப்பதோடு நின்று விடாமல் அதற்கு கீழ்ப்படிய உன்னால் முடிகின்றதா? அன்று கிதியோனின் சேனை கர்த்தரின் யோசனைக்கு கீழ்ப்படிந்து பானைகளை உடைத்து எக்காளங்களை ஊதுகையில், சர்வ வல்லவராகிய நம் கர்த்தர் என்ன செய்தார் பாருங்கள்! தம் ஜனமாகிய இஸ்ரவேலர்களை எதிர்த்து வந்த படையினர் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாய் ஓங்கப்பண்ணினார். முடிவில், அந்த திரள் சேனையானது, வெறும் 300 பேருக்கு முன்பாக ஓடிப்போயிற்று! யுத்தத்தில் இஸ்ரவேலர்கள் வென்றனர்!

இதை வாசிக்கும் இளம் நெஞ்சங்களே! வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு இன்றைக்கே எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரை சார்ந்துக்கொள்ள தீர்மானிப்பீர்களா?

**"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்..." (ஏசாயா 54:17).**

# ஜெபக் குறிப்பேடு

## செவிலியர்கள்



- இந்தியாவில் சுமார் 33.41 இலட்ச செவிலியர்கள் இருக்கின்றனர்.
- இந்தியாவிலுள்ள 8,692 நர்சிங் கல்லூரிகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 3 இலட்சம் செவிலியர்கள் தேர்ச்சி பெறுகின்றனர்.
- உலக சுகாதார நிறுவனத்தின் விதிமுறைகளின்படி இந்தியாவிற்கு மேலும் 43 இலட்ச செவிலியர்கள் தேவைப்படுகின்றனர்.
- குறைந்த ஊதியம், அதிக வேலைப்பளு மற்றும் மரியாதை குறைவாக நடத்தப்படுவதே இந்தியாவில் உள்ள செவிலியர்கள் வெளிநாட்டிற்கு செல்ல பிரதான காரணமாக இருக்கிறது.
- அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் வளைகுடா நாடுகளில் இந்திய செவிலியர்களுக்கு அதிக வரவேற்பு இருப்பதால் அனேகர் அங்கு பணிபுரிய செல்கின்றனர்.

## காவல் துறை



- இந்தியாவில் 13,765 காவல் நிலையங்கள் உள்ளன.
- இந்திய காவல் நிலையங்களில் சுமார் 20,91,488 காவல் அதிகாரிகள் பணிபுரிகின்றனர்.
- இந்தியாவில் சுமார் 2,15,504 பெண் காவல் அதிகாரிகள் பணிபுரிந்து வருகின்றனர்.
- காவல் துறையில் 5,31,737 காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது.
- நாட்டிலேயே பெண் காவலர்கள் அதிகமாக உள்ள மாநிலம் தமிழ்நாடு. டெல்லியைக் காட்டிலும் தமிழகத்தில் 6% பெண் காவலர்கள் கூடுதலாக உள்ளனர் என புள்ளி விவரம் கூறுகிறது.

## பாராளுமன்ற தேர்தல்



- இந்தியாவில் 28 மாநிலங்களும், 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன.
- 543 தொகுதிகளில் 543 உறுப்பினர்கள் போட்டியிடுகின்றனர்.
- சுமார் 91 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.
- 8 தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் 54 மாநில அரசியல் கட்சிகள் இருக்கின்றன.
- இந்தியாவின் 18வது மக்களவை தேர்தல் 2024ம் வருடம் மே மாதம் நடைபெறும்.

## போதைப் பழக்கம்



- உலக நாடுகளில் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் 22% அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் 3.1 கோடி பேர் கஞ்சாவைப் பயன்படுத்துகின்றனர். 2.3 கோடி பேர் ஓபியம், ஹெராயின் போன்றப் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.
- 8.5 இலட்சத்திற்கும் அதிகமானவர்களில் போதைப் பொருட்களை ஊசி மூலம் தங்கள் உடலில் செலுத்திக் கொள்ளும் பழக்கம் அதிகரித்துள்ளது.
- நம் நாட்டில் பள்ளிக் கூடங்களில் படித்து வரும் மாணவ, மாணவியர்களில் 18% பேர் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கம் உடையவர்கள்.
- கஞ்சா, ஓபியம், ஹெராயின், சாராயம் போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்தியதன் விளைவாக இந்தியாவில் ஒரு மணி நேரத்திற்கு ஒருவர் தற்கொலை செய்கிறார்கள்.

# ஜூலை 2023

ஜெபம்: பெனிட்டா



## ஜெபக்குறிப்பு

1. இந்தியாவில் உள்ள 33.41 இலட்ச செவிலியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
2. ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெறும் செவிலியர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புகள் கொடுக்க அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் முன்வர ஜெபிப்போம்.
3. இந்தியாவில் காணப்படும் செவிலியர் பற்றாக்குறை தீர்க்கப்பட ஜெபிப்போம்.
4. செவிலியர்களுக்கு காணப்படும் வேலைப்பளு, மன அழுத்தம் மற்றும் பிரச்சனைகளுக்கு சுகாதாரத் துறை தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.
5. வெளிநாடுகளுக்கு பணிபுரிய முயற்சிக்கும் செவிலியர்களுக்கு தகுந்த ஊதியங்கள் கொடுத்து இந்தியாவில் உள்ள மருத்துவமனைகளில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட ஜெபிப்போம்.



## ஜெபக்குறிப்பு

1. இந்தியாவில் உள்ள சுமார் 21 இலட்சம் காவல் துறை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
2. சுமார் 21 இலட்சம் காவல் அதிகாரிகளுக்கும் கர்த்தர் நல்ல ஞானத்தையும், விவேகத்தையும் கொடுக்க ஜெபிப்போம்.
3. மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் அவர்களுக்கு தேவ பாதுகாப்பும், ஞானமும் உண்டாக ஜெபிப்போம்.
4. எல்லா காவல் அதிகாரிகளும் நேர்மையாகவும், சுயநலமில்லாமல் செயல்படவும் ஜெபிப்போம்.
5. காவல் துறையில் காணப்படும் காலியிடங்கள் நிரப்பப்படவும், காவல் அதிகாரிகளின் வேலைப்பளுக்கள் குறைக்கப்படவும், மனநிம்மதி உண்டாகவும் ஜெபிப்போம்.



## ஜெபக்குறிப்பு

1. தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் திரு. அனுப் சந்திர பாண்டே, மற்றும் திரு. அருண் கோயல் அவர்களுக்கு தேவன் ஏற்ற ஞானத்தை கொடுக்கும்படியாக ஜெபிப்போம்.
2. 2024ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் தேவ ஆளுகை உண்டாக ஜெபிப்போம்.
3. தேர்தலுக்கு ஆயத்தப்படும் கட்சிகள் எந்த விதமான சட்ட விரோத செயல்களில் ஈடுபடாதவாறு ஜெபிப்போம்.
4. வாக்களிக்க இருக்கும் 91 கோடி வாக்காளர்களும் சரியான முறையில் தங்கள் வாக்குகளை அளிக்க, தேவ ஞானம் உண்டாக ஜெபிப்போம்.
5. போட்டியிடும் 543 உறுப்பினர்களும் 543 தொகுதிகளில் உள்ள குறைகளைப் பார்த்து நிறைவேற்றும் வாக்குறுதிகளைக் கொடுக்க ஜெபிப்போம்.



## ஜெபக்குறிப்பு

1. போதைக்கு அடிமைப்பட்டிருக்கும் ஜனங்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.
2. போதையை அதிகரிக்க ஊசிகளை பயன்படுத்துவோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.
3. போதைக்கு அடிமையாகியிருக்கும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்கள் அதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.
4. போதைக்கு அடிமைபடுத்தி, தற்கொலையை தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.
5. கஞ்சா, ஓபியம், ஹெராயின், சாராயம் போன்ற போதைப் பொருட்களை அரசு தடை செய்ய ஜெபிப்போம்.

# கர்த்தரை சார்ந்திருந்தவர்கள்!

சிந்தனை சிதறல்: பெனிட்டா

## யோசபாத் இராஜா



மோவாப் புத்திரர், அம்மோன் புத்திரர் மற்றும் பல மனுஷர்கள் யோசபாத்திற்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்தார்கள். இக்கட்டான இச்சூழ்நிலையில் தன் நாடு முழுவதற்கும் உபவாசத்தை அறிவித்து, கர்த்தருடைய ஆலயத்தில் ஜனங்களைக் கூடி வரச் செய்து, தேவனை நோக்கி கூப்பிட்டார்கள். அப்பொழுது ஒரு லேவியன் மேல் கர்த்தடைய ஆவியானவர் இறங்கி, யுத்தத்தை பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல, ''...நாளைக்கு அவர்களுக்கு எதிராக புறப்படுங்கள் என்று கர்த்தருடைய வார்த்தையினால் தைரியம் பெற்று தேவனுக்கு முன்பாக தரைமட்டும் குனிந்து தாழ விழுந்தார்கள். இஸ்ரவேலின் தேவனாகியக் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி உரத்த சத்தத்தோடு அவரைத் துதித்தார்கள்'' (2 நாளா. 20:21). தேவ சேனையின் வீரர்கள் யுத்தம் செய்ய அதிகாலமே புறப்படுகையில் தேவனாகிய கர்த்தரை சார்ந்திருங்கள், அப்பொழுது நிலைத்து நிற்பீர்கள் என்று சொல்லி அனுப்புகிறான். அந்த பாடகர்கள் சந்தோஷமாக தேவனை புகழ்ந்து சத்தமாகப் பாட ஆரம்பித்தபோது தேவன் தன் மக்களுக்காக யுத்தம் செய்தார். அம்மோனியர்களையும், மோவாபியர்களையும் சேயீர் மலைத் தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் எழும்பி அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள் (2 நாளாகமம் 20ம் அதிகாரம்).

**அன்பான வாலிபர்களே! சின்ன காரியமாக இருந்தாலும், பெரிய காரியமாக இருந்தாலும் யோசபாத் போல கர்த்தரை சார்ந்து நிற்கும் போது தேவன் பெரிய வெற்றியைத் தருவார்.**

## அபியா!



எருசலேமில் 3 ஆண்டுகள் அரசனாக இருந்தான். அபியாவிற்கும், யெரொபெயாமிற்கும் சண்டை ஏற்பட்டது. அபியா தன் படையில் 4 லட்சம் பலமிக்க படைவீரர்களை போரில் ஈடுபடுத்தினான். 8 லட்சம் வீரர்களோடு யெரொபெயாம், அபியாவோடு போரிடத் தயாரானான். எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நாங்கள் கீழ்ப்படிவோம். ஆனால் நீயும் இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் அவரை விட்டு விலகி விட்டீர்கள். தேவன் எங்களோடு இருக்கிறார். உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம் செய்தால் அது உங்களுக்கு வெற்றியைத் தராது என்றான். ஆனால் யெரொபெயாம் ஒரு படைக்குழுவை அபியாவின் படைக்கு பின்பாக அனுப்பினான். யெரொபெயாமின் படை வீரர்கள் அபியாவின் படை வீரர்களை சுற்றி நின்று முன்னும் பின்னும் தாக்குவதைக் கண்டதும், யூத ஜனங்கள் கர்த்தரை நோக்கிப் பார்த்தனர். ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதினார்கள். அபியாவின் படை ஆர்ப்பரித்தபோது தேவன் யெரொபெயாமைத் தோற்கடித்தார். அபியாவின் யூதப்படை யெரொபெயாமின் இஸ்ரவேல் படைவீரர்கள் 5 லட்சம் வீரர்களைக் கொன்று விட்டனர் ( 2 நாளாகமம் 13ம் அதிகாரம்).

**அன்பான வாலிபர்களே! அபியா தன் முற்பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்திருந்ததால் தான் இஸ்ரவேல் ஜனங்கள் தோற்கடிக்கப்பட்டனர். யூத ஜனங்கள் வெற்றியைக் கண்டனர். எந்த இக்கட்டான சூழ்நிலையாக இருந்தாலும் கர்த்தரை சார்ந்து நிற்கும் போது வெற்றி நிச்சயம்!**

# கர்த்தரை சார்ந்திராதவர்கள்!

## ஆசா இராஜா



யூதாவின் ராஜாவாகிய ஆசா கர்த்தருடைய ஆலயத்திலிருந்தும், அரண்மனையிலிருந்தும் பொன்னையும் வெள்ளியையும் எடுத்து, ஆராம் நாட்டு அரசன் பென்னாதாத்திற்கு அனுப்பி ஒரு ஒப்பந்தம் செய்கிறான். ''நீ பாஷாவுடன் உள்ள ஒப்பந்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து விடு, அவன் எனக்கு துன்பம் தராமல் விலகி விடுவான்'' என்று தூது அனுப்பினான் பென்னாதாத், ஆசா சொன்னதை ஏற்று, அவன் தனது படைத்தளபதிகளை அனுப்பி இஸ்ரவேல் நகரங்களைத் தாக்கினான். இஸ்ரவேல் நகரங்கள் தாக்கப்படுவதை பாஷா அறிந்து, ராமாவில் கோட்டைக் கட்டுவதை விட்டு விட்டான். ஆசாவிடம் அனானி என்னும் ஞானதிருஷ்டிக்காரன், ''ஆசா நீ உதவிக்காக ஆராம் நாட்டு அரசனையே சார்ந்திருந்தாய், உனது தேவனாகிய கர்த்தரை சார்ந்திருக்கவில்லை. ஆகையால் ஆராம் நாட்டுப் படையும் உன் கைகளில் இருந்து விலகிப் போனது. எத்தியோப்பியர்களிடமும், லூபியர்களிடமும் வலிமை மிக்க பெரிய படை இருந்தது. ஏராளமான இரதங்களும், குதிரை வீரர்களும் இருந்தனர். நீ உதவிக்கு கர்த்தரை சார்ந்திருந்தபோது அவர் இவர்களை வெல்லும்படியாக உதவினார். நீ கர்த்தரை சார்ந்து கொள்ளாமல் முட்டாள்தனமாய் நடந்து கொண்டாய். எனவே இது முதல் நீ போர்களை சந்திப்பாய்'' என்றான். ஆசாவின் 39வது ஆட்சியாண்டில் அவன் காலில் மிக மோசமான நோய் வந்த போதும் கர்த்தரை சார்ந்திராமல், மருத்துவர்களை சார்ந்திருந்தான். ஆசா தனது 41வது வயதில் மரித்தான் (2 நாளாகமம் 16ம் அதிகாரம்).

**அன்பான வாலிபர்களே! ஆசா கர்த்தரை சார்ந்திருந்த போது, பெரிய படையை வீழ்த்த முடிந்தது. ஆனால் முட்டாள்தனமான காரியத்தால் கர்த்தரை சார்ந்திராததால் அநேக போர்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கர்த்தரை நாம் சார்ந்து நிற்கும் போது அசைக்கப்படுவதில்லை.**

## சிம்சோன்!



தேவதூதரால் முன்னறிவிக்கப்பட்டுப் பிறந்தவன் சிம்சோன். பிறந்ததிலிருந்து நசரேய விரதம் கொண்டிருந்தவன். கர்த்தருடைய ஆவி அவனுக்குள் இருந்ததால் 300 நரிகளைப் பிடித்து அவைகளின் வால்களில் தீப்பந்தங்களைக் கட்டி பெலிஸ்தியரின் வேளாண்மையை அழித்தான். கழுதையின் தாடை எலும்பினால் 1000 பேரைக் கொன்றான். 3000 பெலிஸ்தியர்களைக் கொன்றான். இதுபோல் சிம்சோன் கர்த்தரை சார்ந்திருக்கும் போது வல்லமையையும் ஆற்றலையும் பெற்றுக் கொண்டே வந்தான். இந்த சூழ்நிலையில் தெலீலாள் என்னும் பெண்ணோடு சிநேகமாயிருந்தான். அவளிடம் பெலிஸ்தியரின் அதிபதிகள் சிம்சோனின் பெலன் எதனால் உண்டாயிருக்கிறது என்று கேட்கச் சொன்னார்கள். தெலீலாள் சிம்சோனிடம் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள பலமுறை கேட்கும் போது, தன் உயிருக்கு ஆபத்து வந்தாலும் பரவாயில்லை என்று உண்மையை கூறியிருக்கக் கூடாது. ஆனால் உண்மையை கூறினான். சிம்சோனின் வாயிலிருந்து இரகசியம் வெளிப்பட்டவுடன் அவன் தலைமயிர் சிரைக்கப்பட்டது. அவனுடைய கண்கள் பிடுங்கப்பட்டன. இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டு சிறைச்சாலையில் மாவரைக்க வைத்தனர். சிம்சோனின் பெலன் அவனை விட்டுப் போயிற்று (நியா. 13-21).

**அன்பான வாலிபர்களே! கர்த்தரின் பலத்தை சார்ந்திருந்த போது சீறிவந்த சிங்கத்தை வீழ்த்திய சிம்சோன், கர்த்தரை விட்டு பிரிந்து சென்ற போது பெலனை இழந்து போனான். சிம்சோனைப் போல கர்த்தரை விட்டு பிரிந்து பெலத்தை இழந்து விடாமல், அவரை சார்ந்து வாழும் போது புதுபெலன் கிடைக்கும்!**

# Revival IGNITERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## Monthly Fellowship

## EVERY 1st SUNDAY (2nd July)

**MUMBAI – DHARAVI (5PM – 8PM)**
Gethsemane Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
Gethsamane Prayer Center,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj
College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

## EVERY 2nd SATURDAY (8th July)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21,
Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher
Secondary School,
AC School
Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (9th July)

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - THANE (4PM – 6:30PM)**
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
Gethsamane Prayer Center,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677859766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary
School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (16th July)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
Gethsamane Prayer Center,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
Gethsamane Prayer Center,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
Gethsamane Prayer Center,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
Gethsamane Prayer Center,
MBT Road,
Navalpur.
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**DINDUGAL (3PM TO 6PM)**
Sophia School, Govt Hospital
Emergency Block opp
9043422612 | 9715495621

**CHITTOOR (3PM TO 6PM)**
St. Lukes Telugu Church
9487734603

## EVERY 4th SATURDAY (22nd July)

**PERAMBALUR (5PM -8PM)**
Gethsamane Prayer Center,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (23rd July)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
Gethsamane Prayer Center,
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
YouTube
Comforter DIGITAL CHANNEL
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல்
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547



ON SUNDAY 30th JULY
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS
TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK
ON LAST SUNDAY OF EVERY MONTH

# ஓடுகளம்

## எழுப்புதல் ஓட்டம்



நிகழ்வு: காலேப்

**'ஓடுகளம்' என்கிற தொடரின் மூலம் ஒவ்வொரு மாதமும் தேவனுக்காக ஓடியவர்களைக் குறித்தும், மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர்களைக் குறித்தும் பார்த்து வருகிறோம். தேவ ஊழியர்களின் தீவிரமான ஓட்டம் தேவ ஜனங்களுக்கு விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் கொடுத்தது. இந்த கடைசிகால எழுப்புதலுக்காக தெரிந்துகொள்ளப்பட்ட நம்மூலம் அநேகர் விடுவிக்கப்படவும், ஆசீர்வதிக்கப்படவும் வேண்டுமென்றால் நாமும் தீவிரமாக ஓட வேண்டும், செயல்பட வேண்டும். ஆனால் சில வேளைகளில் பிரச்சனைகள், போராட்டங்கள் மற்றும் பின்மாற்றங்கள் ஆகியவை நம் ஓட்டத்தை தடைசெய்கின்றன. அதுமட்டுமல்லாமல் தவறான திசையில் ஓடவும் வைக்கின்றன. இந்த தடைகளை மேற்கொண்டு தேவனுக்காக எழுப்புதலில் எப்படி ஓடுவது என்பதை பார்க்கலாம்.**

1960ம் ஆண்டு ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் எத்தியோப்பிய நாட்டை சேர்ந்த அபீபி பிகிலா என்கிற வீரர் பங்கு பெற்றார். அதுவரை எத்தியோப்பியா நாடு ஒலிம்பிக்கில் எந்த ஒரு பதக்கமும் வென்றதில்லை. அனைவருடைய எதிர்பார்ப்பும் அமெரிக்கா, பெல்ஜியம் மற்றும் பிரிட்டன் நாட்டின் வீரர்களின் மேலேயே இருந்தது. அப்போது தீடிரென அபீபி பிகிலா ஓடுவதற்காக வாங்கின shoeக்கள் அவர் கால்களுக்கு சரியாக பொருந்தாததினால், அவர் வெறும் கால்களில் ஓட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மாரத்தான் போட்டி பிற்பகலில் ஆரம்பித்ததால் வெயிலின் தாக்கமும் அதிகமாக இருந்தது. இத்தனை தடைகள் பிகிலாவிற்கு ஏற்பட்ட போதும் எதையும் பொருட்படுத்தாது, வெற்றி ஒன்றே இலக்காக ஓடினார். இறுதியில் அந்த போட்டியில் உலக சாதனை படைத்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதுவரை மாரத்தான் போட்டியின் தூரத்தை இவ்வளவு குறைந்த நேரத்தில் யாரும் ஓடி முடித்ததில்லை. இவர்தான் கிழக்கு ஆப்பிரிக்காவில் தங்கம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையையும் படைத்தார். அபீபி பிகிலா தன் சூழ்நிலையைப் பார்த்து சோர்ந்து போயிருந்தால் இவ்வளவு பெரிய சாதனையைப் படைத்திருக்க முடியாது. எப்படியாவது சாதித்து தன் தேசத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென்ற விடாமுயற்சி இவரது



பெயரை சரித்திர புத்தகத்தில் இடம் பெற செய்தது.

அபீபி பிகிலாவை குறித்து வாசிக்கும் போது, எஸ்தர் புஸ்தகம் 8:10ல் குறிப்பிடப்பட்டுள்ள, 'குதிரைகள் மேலும், வேகமான ஒட்டகங்கள் மேலும், கோவேறு கழுதைகள் மேலும் ஏறி சென்ற அஞ்சற்காரர்கள்' நினைவிற்கு வருகிறார்கள். ஆமானின் சதியால் யூதர்களை அழிக்கும்படி ராஜாவிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டு 127 நாடுகளுக்கு சென்றது. ஆனால் எஸ்தர் மற்றும் மொர்தெகாயின் ஜெபத்தால் காரியம் மாறுதலாய் முடிந்து, அவர்களுக்கு வரவிருந்த அழிவு நிறுத்தப்பட்டது, ஆயினும் இன்னும் வேலை முடியவில்லை. 127 நாடுகளுக்கும், 'யூதர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை நிறுத்தபட்டது' என்ற நற்செய்தி அவர்கள் மொழிகளில் குறித்த நாட்களுக்குள் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் யூதர்கள் அழிந்து

விடுவார்கள், இதற்காக தான் சூசான் அரண்மனையிலிருந்து அஞ்சற்காரர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்களின் தீவிரமான ஓட்டம் தேவ ஜனங்களை அழிவிலிருந்து மீட்டது. அவர்கள் எப்படி செயல்பட்டிருப்பார்கள்?

## ராஜாவின் அவசரத்தை உணர்ந்து செயல்பட்டார்கள்:

பொதுவாக நாம் பார்க்கும், கேள்விப்பட்டிருக்கும் அஞ்சற்காரர்களுக்கு (Postman) அநேக கடிதங்கள் வரும், ஆனால் அவர்கள் கைகளிலிருக்கும் கடிதத்தின் அவசரம் அவர்களுக்கு தெரியாது, அவை எதற்காக எழுதப்பட்டது யாரிடம் செல்ல உள்ளது என்று தெரியாது, முகவரி சரியாக இருந்தால் கொண்டு போய் சேர்ப்பார்கள் இல்லையென்றால் அதை திரும்ப அனுப்பி விடுவார்கள். ஆனால் இந்த அஞ்சற்காரர்கள் அப்படியல்ல; அவர்கள் எந்த காரியத்திற்காக போகிறார்கள் என்றும், அவர்கள் கொண்டு போகும் செய்தியின் முக்கியத்துவம் என்ன என்றும் அவர்களை அனுப்பிய ராஜாவின் அவசரத்தையும், உணர்ந்து வேகமாக செயல்படுபவர்கள். அவர்கள் கைகளிலிருக்கும் செய்தியை சரியான இடத்தில், சரியான நேரத்தில் கொண்டு போய் சேர்க்கும் வரை ஓய்ந்திருக்க மாட்டார்கள். இந்த கடைசி காலத்தில் நாம் துரிதமாய் சென்று அறிவிக்க வேண்டிய நற்செய்தி இருக்கிறது. நம் இயேசு சீக்கிரம் வர போகிறார், அவர் தாமதம் செய்யார் (எபி 10:37).

அவர் வருகைக்கு முன் இந்த ராஜ்யத்தின் சுவிசேஷம் பூமியெங்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட வேண்டும். இந்த நற்செய்தி அறிவிக்கப்படாததினால் திரளான ஜனங்கள் இன்று நரகத்தின் விளிம்பில் இருக்கிறார்கள். எனவே ஆண்டவருடைய இருதயத்தில் இருக்கும் பாரத்தை அறிந்து செயல்பட அர்ப்பணிப்போம். ஒருவேளை நற்செய்தி அறிவிக்க தாமதிப்போமானால், நம் ஜனத்திற்கு பெரிய அழிவு ஏற்படும், நற்செய்தியை அறிந்தும் அதை சொல்லாமல் இருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் அல்லாவா? **“நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்தி கொள்ளுங்கள்” (எபேசியர் 5:16).**



## வேகமான குதிரைகளும், ஒட்டகங்களும், கோவேறு கழுதைகளும்:

அஞ்சற்காரர்கள் செய்தியை பெற்றவுடன், வேகமாக அவர்களைக் கொண்டு செல்ல, ராஜாவின் காரியத்திற்காகவே விசேஷமாக ஆயத்தமாக்கப்பட்ட வேகமான குதிரைகள், கோவேறு கழுதைகள் மற்றும் ஒட்டகங்கள் கொடுக்கப்படுகின்றன. சாதாரண குதிரையோ, ஒட்டகமோ இந்த காரியத்தை செய்துவிட முடியாது. அதற்கென்று விசேஷ பயிற்சி பெற்றிருந்தால் மட்டுமே எத்தகைய சூழலிலும் சோர்ந்து போகாமல் போக வேண்டிய இடத்திற்கு தாமதில்லாமல் சென்றடைய முடியும். நம்முடைய கையில் நற்செய்தி இருந்தாலும், அதை தீவிரமாக, சோர்ந்து போகாமல் கொண்டு செல்ல நமக்கு ஒரு பெலன் தேவை, அபிஷேகம் தேவை, அது இருந்தால் மட்டுமே இந்த கடைசி காலத்தில் நம்மால் தீவிரமாக ஊழியம் செய்ய முடியும். இந்த பரிசுத்த ஆவியானவரின் பெலனும், அபிஷேகமும் நமக்கிருக்கிறதா? அப்படி இல்லை என்றால் அதைக் கேட்டு பெற்றுகொள்ளுவோம். இன்று நற்செய்தி அறிவிக்க உன்னை அர்ப்பணித்தால் வரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்பி உன்னைப் பயன்படுத்துவார். அவர் தமது தூதர்களைக் காற்றுகளாகவும், ஊழியர்களை அக்கினி ஜுவாலையாகவும் மாற்றுகிறார் (எபி 1:7).

அன்பு வாலிபர்களே! தேசமெங்கும் பாவத்திலும், சாபத்திலும் அழிந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களுக்கு தீவிரமாக நற்செய்தி அறிவிக்கும் அஞ்சற்காரர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். இதை வாசித்து கொண்டிருக்கும் போது, ஒருவேளை ஆண்டவர் உன்னோடு இடைப்பட்டால் உன் வாழ்கையை அவர் பணிக்கு ஒப்புக் கொடு! வரப்போகும் மாபெரும் எழுப்புதலில் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய புறப்படு!

**“யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்” (ஏசாயா 6:8).**



# மக்கெதோனியா

வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

**அன்பு வாலிபர்களே! வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சில தேசங்களையும் அதின் சிறப்பு மிக்க பட்டணங்களையும் குறித்து பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள்! தொடர்ந்து இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் தேசத்தின் பெயர் "மக்கெதோனியா".**



## அறிமுகம்

- மக்கெதோனியா துவக்கத்தில் கிரேக்க தேசத்தின் வடபாகமாகும்.
- பின்பு, மகா அலெக்சாண்டர் என்பவரின் காலத்தில் வல்லமையான இராஜ்யமாயிற்று (கி.மு. 356-323).
- வேதாகமத்தில், பழைய ஏற்பாட்டில் இதன் பெயர் சொல்லப்படாதிருந்தாலும் தானியேல் 8:5-8ல் குறிப்பிடப்பட்டுள்ள வெள்ளாட்டுக்கடா இத்தேசத்து இராஜாவாக கருதப்படுகிறது.
- புதிய ஏற்பாட்டில், மக்கெதோனியா தேசம் ரோமருடைய அரசாட்சிக்குக் கீழிருந்தது.
- அதில் இருந்த பட்டணங்கள் - பிலிப்பி, தெசலோனிக்கே, பெரோயா என்பவைகள்.

## சிறப்பம்சங்கள்

- மக்கெதோனியா என்ற பெயர் ''உயரமானவர்'' அல்லது ''மேட்டுவாசி'' என்ற பொருளுடைய பண்டைய கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து வந்தது. இங்குள்ள மக்களின் உயரத்தை வைத்து இவ்வாறு பெயரிடப்பட்டதாக கருதப்படுகிறது.
- மக்கெதோனியாவின் சராசரி மக்கள் தொகை சுமார் 20 லட்சத்து 83 ஆயிரம் ஆவார். இவற்றில் 55% கிறிஸ்தவர்களே!
- இவர்களின் தேசிய விலங்கு ''சிங்கம்''. 328 வகையான பறவைகளை உடைய நாடு மக்கெதோனியா ஆகும்.
- மேலும் உலகிலேயே சிறிய பரப்பளவு உள்ள தேசங்களில் மக்கெதோனியா அதிக மலைகளை கொண்ட தேசமாக கருதப்படுகின்றது.
- நம் அனைவருக்கும் பிரபலமான அன்னை தெரெசா அவர்கள் மக்கெதோனியா நாட்டைச் சார்ந்தவர்.

## பவுலும் மக்கெதோனியாவும்

- அப்போஸ்தலனாகிய பவுல், புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவித்தவர் என்பது நீங்கள் அறிந்ததே!
- பவுல் மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றுக்குத் தலைமையான பிலிப்பி பட்டணத்துக்குப் போய் பிரசங்கித்தார். (அப். 16:12)
- மக்கெதோனியா சபையார் எருசலேம் கிறிஸ்தவர்களுக்குச் சந்தோஷமாயும், உதாரத்துவமாயும் கொடுத்ததைப் பற்றி புகழ்ந்து பேசுகிறார் (2 கொரி. 8:1-6).



அன்பு வாலிபர்களே! அன்று பவுலின் சுவிசேஷத்தினால் பிரபலமடைந்தது மக்கெதோனியா. இன்று நீங்கள் கூறும் சுவிசேஷத்தினால் நீங்கள் வசிக்கும் பட்டணம் கூட பிரபலமடையுமே! சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள், அது நம்மேல் விழுந்த கடமை!

# ஏன் கர்த்தரை சார்ந்திருக்க வேண்டும்?

1. நொடிக்கு நொடி மாறும் மாயையான உலகில், என்றென்றும் மாறாத கன்மலையாகிய இயேசுவையல்லாமல் பரலோகத்திலும் பூலோகத்திலும் நாம் சார்ந்திருக்க ஒருவருமில்லை. (சங் 73:25, 26)

2. சுயபுத்தியின் மேல் சாராது கர்த்தரை முதன்மைப்படுத்தி முற்றிலுமாய் அவரையே நம்பி ஜீவிக்கும் போது அவர் நம் பாதைகளை செவ்வைப்படுத்தி, ஆரோக்கியம் தந்து, இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களால் நம்மை திருப்தியாக்குவார். (நீதி 3: 5-10)

3. யாருமற்ற பயம் சூழ்ந்த இருளான பாதைகளில் நடக்கும்போது, கிரகிக்க முடியாத ஆச்சரியமான விதத்தில் ஒளியாய் வருபவர் இயேசு. (ஏசா 50:10)

4. செடியான அவரின் மீது படரப்பட்ட கொடியாய் அவரோடு நெருக்கமான உறவில் இருக்கும் போது நாம் மிகுந்த கனிகளை கொடுத்து மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான பாத்திரமாக இருக்க முடியும். (யோ 15:5)

5. நமக்கு ஒத்தாசை அனுப்பும் கன்மலையாகிய அவரையே நம் கண்கள் எப்பொழுது நோக்கிப்பார்க்கும்போது, நம் தேவை இன்னதென்று அறிந்து நம்மை போஷித்து, பராமரித்து, அனைத்தையும் அருள போதுமானவர். (சங் 145:15)

6. நம் காலங்கள் அனைத்தும் அவர் கரங்களில் இருப்பதால் எதை நினைத்தும் கலங்காமல் எப்போதும் அவரை ஸ்தோத்தரித்து எல்லாவற்றையும் அவரிடத்தில் தெரியப்படுத்தும்போது எதிர்காலத்தைக் குறித்த பயம் இருக்காது. (பிலி 4:6)

7. எத்தனை சொத்து சுகம் ஆஸ்தி இருந்தாலும் அவை அனைத்தும் ஒரு நாள் அழிந்து போகும். அழிவில்லாத ஆத்துமாவை பாதாளத்திற்கு விலக்கி மீட்டு இரட்சிக்கும் வல்லமை அவர் ஒருவருக்கே உண்டு. (சங் 49:15)

தொகுப்பு: ஜாய்லின்









பேசலாம் வாங்க: வயலா

# Coffee with பத்திரிகையாளர்

## நினிவேயின் ராஜா

பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் தான் ஆட்சி செய்யும் இடத்தின் மூலம் அறியப்பட்ட அரசர்களுள் நினிவேயின் ராஜா குறிப்பிடப்பட்டவர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த பல ராஜாக்கள் பாவ வாழ்க்கையில் இருந்த போது, பல தீர்க்கத்தரிசிகளால் அல்லது தேவ மனிதர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டது உண்டு. சில ராஜாக்கள் எச்சரிக்கையைப் புறக்கணித்து தீர்க்கத்தரிசிகளை தண்டித்த அல்லது கொலை செய்த சம்பவங்கள் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் நினிவேயின் ராஜாவோ விசேஷித்தவர். அழிவின் செய்தி காதுக்கு எட்டியவுடன், கர்த்தர் விரும்புகிற தாழ்மையைத் தரித்து, தான் மட்டுமின்றி தன் ஜனங்கள் ஏன் விலங்குகள் கூட உபவாசித்து தேவ இரக்கத்திற்கு மன்றாட கற்றுக் கொடுத்து, முழு நகரத்தையும் அழிவுக்கு தப்புவித்தவர். இத்தகைய சிறப்பு தன்மைகள் உடைய நினிவேயின் ராஜாவுடனான உரையாடலின் கற்பனைத் தொகுப்பை கீழ் காண்போமா?

**பத்தி:** வணக்கம் அரசே !

**நி.ரா:** வணக்கம்.

**பத்தி:** அரசே, உங்களைப் பற்றியும், உங்கள் நகரத்தைப் பற்றியும் கூறுங்களேன்.

**நி.ரா:** இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் வாழ்ந்த நினிவே பட்டணத்தை அரசாட்சி செய்த அரசன் நான். நினிவே என்பது அசீரியப் பட்டணத்தின் தலை நகராகத் திகழ்ந்த பழங்கால நகரமாகும். இது டைகிரீஸ் நதியோரத்தில் பாபிலோனுக்கு 280 மைல் வடக்காக அமைந்திருந்தது. அதன் அழகாலும், அமைப்பாலும், தோட்டங்களாலும் பெயர் பெற்றிருந்த நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது.

**பத்தி:** இவ்வளவு செழிப்பான, திரளான மிருக ஜீவன்கள் வாழும் அளவிற்கு இயற்கை வளமுள்ள நகரத்திற்கு 'அழிவின் செய்தி' – ஏன்? யாரால் கூறப்பட்டது?

**நி.ரா:** நகரம் செழிப்புள்ளது தான். ஆனால் வாழ்ந்த மக்கள் துன்மார்க்கமான, மிருகத்தனமான, ஒழுக்கக் கேடுள்ளவர்களாக இருந்தனர். நினிவே ஜனங்களுடைய அக்கிரமம் மிகுதியானதினால் தேவ சமூகத்தில் எட்டி பாவத்தினிமித்தம் வரும்

தண்டனை தீர்க்கத்தரிசனமாக, இரண்டாவது யெரோபெயாமின் காலத்தில் (இராஜா. 14:25) இஸ்ரவேலின் வட இராஜ்யத்தின் தீர்க்கத்தரிசியான அமித்தாயின் குமாரனாகிய யோனாவினால் கூறப்பட்டது. யோனா, கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்கு இரண்டு மூன்று மைல் வடக்கிலுள்ள காத்தேப்பேர் ஊரைச் சார்ந்தவர்.

**பத்தி:** யோனா தீர்க்கத்தரிசி எச்சரித்தவுடன் நீங்களும் உங்கள் ஜனங்களும் என்ன செய்தீர்கள்?

**நி.ரா:** அதுவரை நானும் என் ஜனங்களும் எங்கள் விருப்பப்படி வாழ்ந்து வந்தாலும், 'இன்னும் நற்பது நாள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்' என்று யோனா தீர்க்கத்தரிசி எச்சரித்தவுடன், எங்கள் ஜனங்கள் தேவனை விசுவாசித்து உபவாசம் செய்தார்கள். பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டு உடுத்திக் கொண்டார்கள். மூன்று நாள் பிரயாண தூரமான நினிவேயில் ஒரு நாள் பிரயாண தூரத்திலுள்ள ஜனங்களுக்கு மட்டுமே யோனா எச்சரிப்பின் செய்தியை பிரசங்கித்திருந்தார். அதாவது ஜனங்களில் மூன்றில் ஒரு பங்கு ஜனங்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டிருந்தாலும் எச்சரிப்பின் செய்தி காட்டுத்தீ போல் பரவி முழு நகரத்திற்கும் எட்டி விட்டது. என் காதுக்கும் எட்டியவுடன், இஸ்ரவேலின் தேவன் இரக்கமுள்ளவர் என்பதால் என்னைத் தாழ்த்தும்படி சிங்காசனத்தை விட்டு சாம்பலுக்குமாறி உட்கார்ந்தேன். ராஜ வஸ்திரத்தை களைந்து இரட்டு உடுத்திக் கொண்டேன்.

**பத்தி:** பின்னர் என்ன நடந்தது? ஒரு அரசனாக இந்த சூழ்நிலையில் நீங்கள் ஆற்றிய பணி என்ன?

**நி.ரா:** பின் என் பிரதானிகளுடன் ஆலோசித்து, நினிவே எங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசி பாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக் கொண்டு தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவும் கட்டளையிட்டேன்.

**பத்தி:** உங்கள் ஜனங்கள் கீழ்ப்படிந்தார்களா? அப்புறம் என்ன நடந்தது?

**நி.ரா:** ஆம், கீழ்ப்படிந்தார்கள். சோதோம் கொமொரா அழிந்ததை எங்கள் முன்னோர் சொல்லிக் கேட்டிருக்கிறோம். எனவே நானும் என் ஜனங்களும் மிகவும் பயந்திருந்தோம். அனைத்து ஜனமும் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு மனம் திரும்பினார்கள். எனவே தேவன் அவர்கள் கிரியைகளைப் பார்த்து தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கை குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்.

**பத்தி:** நீங்கள் எதிர்ப்பார்த்திருந்த அழிவு வரவில்லை என்றவுடன் எவ்வாறு உணர்ந்தீர்கள்?

**நி.ரா:** 40 நாட்களில் நகரமே அழிந்து விடும் என்று எண்ணி மிகவும் கலங்கி பயந்து குடும்பம் குடும்பமாக வீட்டிற்குள்ளேயே முடங்கி, செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் நிறைவேற்றி நாட்களை எண்ணிக் கொண்டு இருந்தோம். 40 நாட்கள் கடந்தும் கூட நகரம் அழியவில்லை என்பதை உணர்ந்த பின், எங்கள் ஜீவனை அழிக்காமல் கிருபையாய் காத்த இரக்கமுள்ள தேவனுக்கு கோடா கோடி நன்றிகளை செலுத்தினோம். அப்புறம் தான் எங்களுக்கு நிம்மதியாக மூச்சே வந்தது. நிம்மதியாக சாப்பிட்டு, நிம்மதியாக தூங்கினோம். மனிதன் தான் செய்யும் பாவத்தினாலே நிம்மதியை இழந்து, அழிவையும் பயம் நிறைந்த வாழ்வையும் பெறுகிறான். ஆனால் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்து விட்டு விட்டால் தேவ இரக்கம் பெறுவான் என்பதை எங்கள் வாழ்வின் மூலமாக நன்றாய் அறிந்துக் கொண்டேன்.

**பத்தி:** சரியான கருத்தை சொன்னீர்கள் அரசே! நீங்கள் எங்கள் வாலிபருக்கு கூற விரும்புகிறது என்ன?

**நி.ரா:** வாலிபரே, நீங்கள் யாராவது அறியாமல் ஏதாவது பாவத்தில் வாழ்ந்துக் கொண்டு இருப்பீர்கள் என்றால் இன்றே அதனை தேவனிடம் அறிக்கை செய்து விட்டு விடுங்கள். அது உங்களுக்கு நல்லது. இல்லாவிட்டால் உங்கள் பெற்றோர் / ஆசிரியர் அல்லது யாரேனும் தேவ பிள்ளைகள் எச்சரிப்பின் செய்தியைக் கூறும்போதாவது மனம் திருந்தி விடுங்கள். அடிக்கடி கடிந்துக் கொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான் என்று வேதம் எச்சரிக்கின்றது. கடிந்து கொள்ளுதலை கவனித்து நடக்கிறவனோ விவேகி என்ற வேத வார்த்தையின்படி விவேகமாய் நடந்துக் கொள்ளுங்கள், அப்பொழுது கனமடைவீர்கள்!

**பத்தி:** நன்றி அரசே!

**நி.ரா:** நன்றி விடை பெறுகிறேன்.



# செய்திகள்!

## உலகிலேயே மிகப்பெரிய அளவில், ₹1 லட்சம் கோடியில் உணவு தானிய சேமிப்பு குடோன்!



- மேலும் 700 லட்சம் டன் சேமிக்க வாய்ப்பு
- ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்

கூட்டுறவு துறையில் உலகிலேயே மிகப்பெரிய உணவு தானிய சேமிப்பு திறனை உருவாக்க ரூ.1 லட்சம் கோடியில் புதிய திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் ஒன்றிய அமைச்சரவை கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கூட்டுறவு துறையில், உலகிலேயே மிகப்பெரிய அளவில் உணவு தானிய சேமிப்பு திறனை உருவாக்க ரூ.1 லட்சம் கோடி முதலீட்டில் புதிய திட்டத்தை தொடங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்படி அடுத்த 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் 700 லட்சம் டன் உணவு தானிய சேமிப்பு திறனை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு தொகுப்பிலும், 2000 டன் கொள்ளவு கொண்ட கிடங்குகள் அமைக்கப்படும்.

தற்போது நாட்டின் உணவு தானிய உற்பத்தி சுமார் 3,100 லட்சம் டன்னாக உள்ளது. இதில் 47 சதவீதத்தை மட்டுமே சேமிக்கக் கூடிய திறன் நம்மிடம் உள்ளது. அதாவது, 1.450 லட்சம் டன் உணவு தானியங்களை மட்டுமே சேமிக்கும் திறன் உள்ளது. இந்த புதிய திட்டம் மூலம் புதிதாக 700 லட்சம் டன் சேமிப்பு திறன் உருவாக்கப்படுவதால் நாட்டின் மொத்த சேமிப்பு திறன் 2.150 லட்சம் டன்னாக உயரும் சோதனை முயற்சியாக 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு பின்னர் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார். – தினகரன், 1 ஜுன் 2023.

## இந்திய பெருங்கடலில் 6 மணி நேரம் 4 ரபேல் போர் விமானங்கள் பயிற்சி!

இந்திய பெருங்கடலில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ரபேல் போர் விமானங்கள்.

இந்திய பெருங்கடலில் 4 ரபேல் போர் விமானங்கள் திடீரென்று பல்வேறு பயிற்சிகளை மேற்கொண்டன. ரபேல் போர் விமானங்கள் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே கடந்த 2020ம் ஆண்டு இந்தியா விமானப் படையில் இணைக்கப்பட்டது. அரியானா மாநிலம் அம்பாலா படைத்தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த இணைப்பு திருவிழா போன்று நடைபெற்றது.

இந்நிலையில் மேற்கு வங்க மாநிலம் ஹசிமாரா போர் விமான தளத்தில் இருந்து 4 ரபேல் போர் விமானங்கள் இந்திய பெருங்கடலில் சீறிப் பாய்ந்து பயிற்சியில் ஈடுபட்டன.

பல விமானங்களுக்கு நடுவே பறந்து செல்வது, தாழ்வாக பறந்து இலக்கை அடைவது, இலக்குகளை துல்லியமாக தாக்கி விட்டு குறித்த நேரத்தில் திரும்பி வருவது உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 6 மணி நேரம் இந்த பயிற்சிகள் நீடித்தன. இந்திய பெருங்கடல் பகுதியில் சீனா அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் நிலையில் இந்திய ராணுவத்தின் ரபேல் விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

– தினகரன், 1 ஜுன் 2023.



Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் எழுப்புதல் கூடுகை



இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக, "10 ஆண்டுகளுக்குள் 10 கோடி வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி வாலிபர்களை இரட்சிப்புக்குள் நடத்த வேண்டும்" என்று தேவன் கொடுத்த தரிசன திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் அரக்கோணம், பாண்டிச்சேரி, விழுப்புரம் மாவட்டங்களிலும், ஆந்திரா மாநிலத்தில் நெல்லூர், ஓங்கோல் மற்றும் குண்டூர் பகுதிகளில் "வாலிபர் எழுப்புதல் கூடுகைகள்" நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூடுகைகளில் ஊழியர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். இக்கூட்டங்களில் சுமார் 1250 வாலிபர்கள் கலந்துகொண்டு எழுப்புதல் தரிசனத்தைப் பெற்றுச் சென்றதோடு, **41,250 கைப்பிரதிகளையும்** வாங்கிச் சென்றுள்ளனர். தேவனுக்கே மகிமை!



















Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 06 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

**செங்கல்பட்டில்....**

நாள்: **ஜூலை 9**
(ஞாயிறு)

நேரம்: மாலை 4 மணி முதல்
8 மணி வரை

இடம்: SDA பள்ளி ஆடிட்டோரியம்,
பழைய பேருந்து நிறுத்தம் அருகில்,
செங்கல்பட்டு

செய்தியும் ஜெபமும்:
**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 9488475315, 9597588831,
9710809626

**திருவனந்தபுரத்தில்...**

நாள்: **ஜூலை 30**
(ஞாயிறு)

நேரம்: மாலை 5:30 முதல்
8:30 வரை

இடம்: சுதேசாபிமானி டவுன் ஹால்
TB சந்திப்பு அருகில்,
நெய்யாற்றின்கரை, திருவனந்தபுரம்

செய்தியும் ஜெபமும்:
**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு : 7510997867,
8281514822

தென்காசி மாவட்டம்
**திருவேங்கடத்தில்...**

நாள்: **ஆகஸ்ட் 5**
(சனி)

நேரம்: காலை 10 மணி முதல்
மாலை 4 மணி வரை

இடம்: CSI கிறிஸ்து ஆலயம்,
ராஜபாளையம் ரோடு, திருவேங்கடம்
தென்காசி மாவட்டம்

செய்தியும் ஜெபமும்:
**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 9750955548,
9384717769



சகோ. அவினாஷ்



சகோ. சாம் ஜெபராஜ்

# எழுப்புதல் முழு இரவு ஜெபம்

**காரைக்குடியில்...**

நாள்: **ஜூலை 21**
(வெள்ளி)

இடம்: CSI தெய்வீக மகிமையின் ஆலயம்,
கோட்டையூர்.

நேரம்: இரவு 9 மணி முதல் அதிகாலை 4 மணி வரை.

செய்தியும் ஜெபமும்: **சகோ. சதீஷ்குமார்.**

தொடர்புக்கு : 9750955548

